Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction,
K.K.S Road,
Jaffna,
Sri Lanka
-021-2225170

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 08 (14.11.2002) வியாழக்கிழமை இதழ் : 45





முகமாலையில் நேற்று நடந்த பேச்சுக்கு வருகைதந்த கடற்புலிகளின் துணைத் தளபதியும் வடபிராந்திய கடற்படைத் தளபதியும் பரஸ்பரம் கைகுலுக்கிக் கொள்வதை முதற்படத்திலும், திட்டவரைபில் கைச்சாத்திடும் கடற்புலிகளின் துணைத்தளபதி செழியன், வடபிராந்திய கடற்படைத் தளபதி ஆகியோரை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

(மேலும் படங்கள், செய்திகள் 9 ஆம் பக்கத்தில்)

★ சுதந்திரமான கடற்தொழில் ★ போராளிகளின் கடற் பயணம்

# சிபாரிசுகள் அடங்கிய திட்டவரைபில் கடற்படை - கடற்புலிகள் கைச்சாத்து!

## முதற்தடவையாக நடந்த சந்திப்பு

(கணேஷ், லிவிங்ஸ்ரன்)

**வடக்கு-கிழக்கு கடற் பிராந்தியத்தில் சுதந்திர மான கடற்தொழிலை மேற்கொள்வதிலுள்ள பிரச்சி னைகள் தொடர்பாகவும் போராளிகளின் கடற் போக்குவரத்துத் தொடர்பாகவும் படைத்தரப்பு மற்றும் விடுதலைப் புலிகளின் சிபார்சுகள் அடங் கிய திட்ட வரைபு ஒன்று நேற்று முகமாலையில் கைச்சாத்திடப்பட்டது.**

மேற்படி திட்ட வரைபில் விடு தலைப் புலிகள் தரப்பில் கடற் புலிகளின் துணைத்தளபதி லெப். கேணல் செழியனும் படைத்தரப்பில் ரியல் அட்மிரல் சரத் வீரசேகராவும் கையொப்பமிட்டுட்டுள்ளனர்.

முகமாலை சூனியப் பிரதேசத் தில், நேற்றுக்காலை 10 மணிய ளவில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூப் ஹொவ்டே

(10ஆம் பக்கம் பார்க்க)

விண்ணாணம் விநாசியர்



நேவிக்காரர் கொஞ்சம் சனத் தையும் யோசிச்சா பிரச்சினை யைத் தீர்த்திடலாம்...

## கடற்படை அச்சுறுத்தல் நிறுத்தப்பட வேண்டும்!

### விடுதலைப் புலிகள் தரப்பில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

"சுதந்திரமான கடற்தொழிலுக்கு அனுமதிக்கப்படவேண்டும். தற்போது கடற்தொழிலுக்கு அரசு சிபார்சு செய்துள்ள எட்டு இடங்களும் பொது வானவையாக இல்லை. அனைத்துப் பிரதேசங்களிலும் கடற்தொழில் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும். அனுமதிப்பத்திர நடைமுறை நீக்கப்படவேண்டும்."

இவ்வாறு நேற்றைய பாதுகாப்பு உயர்குழுக் கூட்டத்தின் போது விடு தலைப் புலிகள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அரசின் சிபார்சின்படி - மாதகல், காரைநகர், புங்குடுதீவு, ஊர்காவற் துறை ஆகிய பகுதிகளில் 8 நுழைவாயில்கள் வழியாக மீன் பிடித்தலுக்கு அனுமதி வழங்கப்படவிருந்தது. ஆனால்

(10 பக்கம் பார்க்க)

## சுமுகமாகவும் சிநேகமுடனும் நடைபெற்ற கலந்தாலோசனை

யுத்தத்தால் சிதைந்துபோன முகமாலை சூனியப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும் இராணுவ, கடற்படைத் தளபதி களுக்கும் இடையில் சுமுகமான சந்திப்பு நேற்றுக்காலை நடைபெற்றது.

இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் காணப்படும் மேற்படி சூனியப்பிரதேசத்தில் மிக அவசர அவசரமாக அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகையொன்றில் நேற்றைய சந்திப்பு மிகவும் சிநேகபூர்வமான முறையில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை மேற்படி

(10 ஆம் பக்கம் பார்க்க)



## தளபதிகளின் பாதுகாப்புக்கு ஆயுதங்கள்; உடன்பாடு எட்டுவதற்குப் புலிகள் முயற்சி!

(யாழ்ப்பாணம்)

தரை, கடல், வான் பரப்புகளில் விடுதலைப் புலிகளின் தளபதிகள் செல்லும்போது ஆயுதங்களுடன் செல்ல வேண்டும் எனக் கோரும் ஒரு உடன்பாட்டைச் செய்துகொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் பாது காப்பை விடுதலைப் புலிகளாலேயே உறுதிசெய்ய முடியும். இதுதொடர் பாக ஓர் உடன்பாடு மிக விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளது. விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் பய ணம்செய்யும்போது அவர்களின் பாது காப்பினை உறுதி செய்வதற்காக மேற்படி ஏற்பாடு செய்யப்பட இருக் கிறது.

நோர்வே அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் கண்காணிப்புக் குழு வினரும் விடுதலைப் புலிகளின் முக் கிய தளபதிகளின் பாதுகாப்பு நிச்ச யமாக விடுதலைப் புலிகளாலேயே உறுதிசெய்யப்பட வேண்டும். வேறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அவுஸ். துணைத் தூதுவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் இலங்கைக் கான அவுஸ்திரேலியத் துணைத் தூதுவர் பேர்ட் லோகன் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையா டல் ஒன்றினை நடத்தினார்.

கிளிநொச்சியிலுள்ள அரசியற் துறை அலுவலகத்தில் நேற்றுமுன் தினம் மாலை 3.30 மணியிலிருந்து 4.30

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் இன்றுமுதல் பகிஷ்கரிப்பு!

(யாழ்ப்பாணம்)

தமது அத்தியாவசியத் தேவைகள் சம்பந்தமான கோரிக்கைகளை பல்கலைக்கழக நிர்வாகம் நிறைவேற்றத் தவறியதை ஆட்சேபித்து இன்றுமுதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்க ரிக்கவுள்ளனர். அனைத்து பீட மாணவர்களும் இந்த பகிஷ்கரிப்பில் பங்குபற்றவுள்ளனர்.

நேற்று மாலை நடைபெற்ற மாணவர்களுக்கும் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் இடையிலான சந்திப்பில் மாணவர்களின் கோரிக்கை கள் பல ஏற்றுக்கொள்ளப்படவில்லை என

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 517019
(சி-148)

# தனியார் மயமாக்கப்பட்ட பஸ் கம்பனிகள் விபரம் தருமாறு ஜனாதிபதி பணிப்பு !

(கொழும்பு நிருபர்)

பிரித்தானிய முன்னாள் பிரதமர் ஜோன் மேயரின் நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆறு பஸ் கம்பனிகள் தொடர்பான பூரண அறிக்கையைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் திலக் மாரப்பன விடம் ஜனாதிபதி சந்திரிகா கேட்டுள்ளார்.

இத்தகவலை ஜனாதிபதியின் ஊடகச் செயலாளர் ஜினதாஸ பீரிஸ வெளியிட்டார். போக்குவரத்துத் தொழிலாளரின் கூட்டமைப்பு என்ற தொழிற சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றையடுத்தே திலக் மாரப்பனவிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி தொழிற்சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில, இலங்கைப் போக்குவரத்து சபைத் தொழிலாளரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

# அம்பாறையில் பயிற்சி முடித்து 175 போராளிகள் வெளியேறுவர்

**- நாளை கஞ்சிக்குடிச்சாறில் அணிவகுப்பு -**

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிக்குடிச்சாறு விடுதலைப் புலிகளின் பயிற்சிப் பாசறையிலிருந்து பயிற்சி முடித்து வெளியேறும் ஒரு தொகுதிப் போராளிகளின் அணிவகுப்பு நாளை இடம்பெறவுள்ளது.

கஞ்சிக் குடிச்சாறு பயிற்சிப் பாசறையின் 10ஆவது தொகுதிப் போராளிகளே பயிற்சி முடித்து வெளியேறுகின்றனர். 175 ஆண் போராளிகள் இதில் இடம் பெற்றுள்ளனர்.

பயிற்சி முடித்து வெளியேறும் போராளிகளின் அணிவகுப்பு , மற்றும் சாகச நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. இந் நிகழ்வில் மட்டு-அம்பாறை மாவட்டச் சிறப்புத் தளபதி ரமேஷ், அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தனன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா ஆகியோர் கலந்து கொள்வர்.

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

இசைப்பிரியனின் இசை நெறியாள்கையில் உருவான நிதர்சன வெளியீடான "கல்லறை தழுவும் கானங்கள்" ஒலிப்பதிவு நாடாவின் அறிமுக விழா எதிர்வரும் 17ம் திகதி மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

## வீதி புனரமைப்பு

(பன்னாலை)

வலி.வடக்கு பிரதேச சபையால்- வசாவிளான் குட்டியப்புல வீதிகள் விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.

2002 இல் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தே இப்புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் திருமதி சிறிபாஸ்கரன் தெரிவித்துள்ளார். (72)

## அமைச்சின் செயலாளராக தியாகலிங்கம் நியமனம்

(திருகோணமலை நிருபர்)

வட-கிழக்கு மாகாணசபையின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளராக தியாகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளராக இருந்த அமிர்தலிங்கம் ஆளுநரின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## மந்திகையில் தங்கச் சங்கிலி கண்டெடுப்பு

(வடமராட்சி கிழக்கு)

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் கண்டெடுக்கப்பட்ட கைச் சங்கிலி ஒன்று மந்திகை வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவற விட்டவர்கள் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம் என்று பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார். (17)

## சட்டவிரோத மதுபான நிலையம் முற்றுகை

(மீசாலை)

மட்டுவில் தெற்கு பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த மதுபான விற்பனை நிலையத்தைச் சுற்றிவளைத்த சாவகச்சேரி பொலிஸார் அதன் உரிமையாளரைக் கைது செய்ததுடன் பெருமளவு பானங்கள், பியர் மற்றும் உற்பத்திச் சாதனங்களையும் கைப்பற்றியுள்ளனர். (25)

# இன்றைய நாள் இனிய நாள்

**14-11-2002 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் :- | தேகசுகக்குறைவு, செய் தொழில் இலாபம், தெய்வதரிசனம், சமய அறிஞர் உறவு, கல்வியில் ஊக்கம் வேணடும், |
| இடபம் :- | மனமகிழ்ச்சி, தொழிற் சிறப்பு, சீர்திருத்த வேலை, சிரமதான வேலை, கௌரவம், கல்வி முன்னேற்றம், வியாபாரநிலை சமம். |
| மிதுனம் :- | தேகசுகம் நன்று, தெய்வதரிசனம், சமய அறிஞர் உறவு, எதிரிகளின் ஆணவவலி குன்றுதல், பிதாவுடன் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| கர்க்கடகம் :- | தேகசுகக் குறைவு, வைத்தியச்செலவு, புதிய வேலைகளில் ஈடுபடுவது நன்றல்ல, அயலவர்களுடன் உறவு பேணப்படல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் சமம |
| சிங்கம் :- | மனமகிழ்ச்சி, பணவரவு நன்று, சுபகாரியங்களில் பங்கு, ஆடையாபரண மகிழ்ச்சி, கலை நிகழ்ச்சியில் ரசனை, பெண்களால் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| கன்னி :- | தேகசுகம் நன்று, மன மகிழ்ச்சி, கடன் வசூலாதல், புதிய கடன் வசதி, எதிரியின் ஆணவவலி குன்றுதல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் :- | மனமகிழ்ச்சி, புத்திரர் சுகம், பொதுசேவையில் பங்கு, மதிப்பு, விருந்தினர் வருகை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| விருச்சிகம் :- | தேகசுகக்குறைவு, மாதா தேகசுகக்குறைவு, வைத்தியச் செலவு, வாகனச்செலவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம் சமம். |
| தனு :- | தேகசுகம் நன்று, எடுத்த காரியம் வெற்றி, ஆடையாபரணபலன், அறுசுவையுண்டி, இளைய சகோதர உறவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மகரம் :- | தேகசுகக்குறைவு, பணவரவு, மனச்சஞ்சலம், வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கும்பம் :- | மனமகிழ்ச்சி, விருந்தினர் வருகை, அறுசுவையுண்டி, ஆடையாபரண கலை நிகழ்ச்சியில் மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம். |
| மீனம் :- | மனச்சஞ்சலம், கர்வம், தேவையற்ற செலவு, எதிலும் திருப்தியில்லா நிலை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |

SUNDHARSON
Importers & Distributors of
Electrical Items, P.V.C.pipes & Fittings Etc.
Central Market View, Manipay.
T.P. / Fax : 021 - 2222751
சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்.
உள்ளூரிலேயே மக்கள் சேவையை சிரமேற் கொண்டு
கடந்த 22 ஆண்டு காலமாக
❑ மின்சார உபகரணங்கள்
❑ P.V.C.நீர்க் குழாய்கள், இணைப்புக்கள்
❑ அலங்காரப் பொருட்களை
நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

ராஜா
யாழ்ப்பாணம்.
தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த

வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)

ஜோ.எகட்டனின் ஜெசித்தாராவின்
இன்றைய ஸ்பெஷல்
குங்குமப்பூக்கள் புரியாணி
ரூபா 125
ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.
(சி-163)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், சந்தியா நடித்த
காட்சி நேரம்
11.00, 2.45, 6.00
வெள்ளி, சனி, ஞாயிறு மட்டும்
இரவு 8.45 காட்சி
UNIVERSAL SOLDIER
(சி-139)



# மாவீரர் நாள் கையேடு விடுதலைப்புலிகளால் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையின் தமிழீழ மாவீரர் பணிமனையால் "மாவீரர் நாள் கையேடு" என்ற நூல் வெளியீடு செய்யப்பட் டுள்ளது.

இதயக் கோயிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள் என மகுடத்தினாலான தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவரின் செய்தியுடன் இக்கையேட்டில் பல அம்சங்கள் காணப்படுவதுடன், இதில் மாவீரர் நாட்களில் அனுஷ்டிக்கப்பட வேண்டியவை மற்றும் மாவீரர் நாள் நேரகால ஒழுங்குகள் என்பனவும் தமிழீழத் தேசியக் கொடியின் வரலாறு தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்படும் போது பாட வேண்டிய பாடலும் இக்கையேட்டில் காணப்படுகின்றன. (லி)

# விடுதலைப் புலிகள் ஏடு வெளிவந்துள்ளது!

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' குரல் - 108 வெளிவந்துள்ளது.

இரண்டாம் கட்டப்பேச்சின் பெறுபேறுகள் - முன்னேற்றம் கண்டு வரும சமாதான முயற்சி என்ற தலைப்பு செய்தியுடன் வெளியாகியுள்ள இவ்விதழில், நீதிமன்றத் தீர்ப்பு ஒரு அரசியல் சதி என்ற தலைப்பில் ஆசிரியர் தலையங்கமும், ஜே.வி.பி யின் சந்தர்ப்பவாத அரசியல் வியூகம், சிங்களத்தின் ஆறுகள் பின்நோக்கிப் பாய்கின்றன, மக்களிடமிருந்து நிலங்களைப் பாதுகாத்தல், சமாதான எதிர்ப்பு வியூகங்களும் ஜனாதிபதியின் தலைமைத்தளபதியும், இத்தீவின் மக்களிடமிருந்து சமாதானம் அதிக விழிப்பைக் கோருகின்றது. தேசிய மகளிர் மாநாடு, சாமாதான காலப் படுகொலைகள், மற்றும் கேணல ராஜு குறித்த ஒரு போராளியின் குருதிச்சுவடுகள், விடுதலைப்போரும் பெண்விடுதலையும், களமருத்துவ அதிர்வுகள், மானுடத்தின் தமிழ் கூடல் - 2002, காலம் வென்று தந்த களம், உயிரால் அரணமைத்துத் தேசம் காத்தவர், பொறுப்புள்ள விதார் ஹெல்கிஸனும் பொறுப்பற்ற சந்திரிகாவும், ஆகிய கட்டுரைகளும், கேட்கிறதா மணி? கேட்கிறதா பாடல்? தெரிகிறதா நெய்விளக்கு?, என்ற வியாசனின் கவிதையும் இடம் பெற்றுள்ளது.

# பாலர் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு வெற்றிடம்

(நெல்லியடி)

யாழ்.மாவட்டத்தில் 14 பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகிறது. இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கான கல்வித் தகைமைகள் பலரிடம் இருந்தும் - டிப்ளோமா சான்றிதழ் இல்லை என்ற காரணத்தால் நியமனங்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சனசமூக உத்தியோகத்தர் - பாலர் பாடசாலை ஆசிரிய நியமனம் தொடர்பான தீர்மானம் ஒன்றுக்கு விளக்கமளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், இது தொடர்பாக மாகாணப் பொது நிர்வாக அமைச்சுடன் தொடர்பு கொண்டு - விரைவில் நல்ல பதிலைத் தருவதாக உறுதியளித்துள்ளார். (12)

# இளைஞர் படையணிக்கு 40ஆயிரம் பேர் சேர்ப்பு

ஜனவரி மாதம் ஆரம்பமாக இருக்கும் இளைஞர் படையணிக்கு வேலையற்ற 40 ஆயிரம் இளைஞர், யுவதிகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் தெரிவு செய்யப்படும் இளைஞர் யுவதிகளுக்கு பதினெட்டு மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். பின்பு இவர்கள் மூலம் அரசாங்க, தனியார் துறைகளில் ஏற்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

நாட்டில் உள்ள பிரதேச செயலகப் பிரிவு ஒவ்வொன்றுக்கும் 250 பேர் வீதம் இப்படையணிக்கு தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு பயிற்சிக்காலத்தில் 2000 ரூபா வீதம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உங்கள் அன்புச் செல்வங்களின்
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
நமது ஈழநாட்டில்!
முற்றிலும் இலவசமாக!!
உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின்
பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது!
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும்,
புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.
வாழ்க வளமுடன் !
சிறாரின் பெயர் :..............................
முகவரி :..............................
பிறந்த ஆண்டு :..............................

கூப்பன்களஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன..
..............................
பெற்றார் ஒப்பம்

# யாழ்ப்பாணத்தில் சர்வதேச பாடசாலை; கல்வித்தரத்தை மேம்படுத்த நடவடிக்கை!

## யாழ். செயலகம் முயற்சி

யாழ்ப்பாணத்தில் சர்வதேச பாடசாலை ஒன்றினை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.மாவட்ட மாணவர்களது கல்வி நிலையை மேம்படுத்துவதற்காக மிக விரைவாக யாழ். மாவட்டத்தில் சர்வதேச பாடசாலையை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அனேகமாக அடுத்த ஆண்டுமுதல் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொளளப்பட இருக்கின்றது.

அடுத்த ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான திட்டவரைபுகள் சமர்ப்பிக்கப்படும்போது, சர்வதேச பாடசாலை அமைப்பதற்கான திட்டம் மிக முக்கியமானதாகச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. யாழ்.குடாநாட்டில் மேற்படி பாடசாலையின் அவசியம் கருதி முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு வசதியாக வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

(க,100)

# வன்னியிலிருந்து திரும்பியோர் நிவாரணம் பெறுவதில் சிரமம்!

(நெல்லியடி)

வன்னியிலிருந்து வந்து மீளக் குடியேறும் மக்கள் தமது மாதாந்த நிவாரணப் பொருட்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வன்னியில் வசித்த கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரிடம் தாம் இறுதியாக நிவாரணம் பெற்ற காலப்பகுதியை உறுதிப்படுத்திப் பெறப்பட்ட கடிதத்தை தற்போது மீளக் குடியமரும் கிராம அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது.

இதற்கு நீண்ட கால தாமதம் ஏற்படுவதாகவும், உறுதிப்படுத்தல் கடிதத்தை பெற்று ஒப்படைக்கும் வரையான காலப்பகுதிக்குரிய நிவாரணம் தமக்கு வழங்கப்படுவதில்லை எனவும் வன்னியிலிருந்து திரும்பிய மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அரச நிர்வாக சேவை நியமனங்கள் அடுத்தவாரம் உறுதிப்படுத்தப்படும்!

(கொழும்பு நிருபர்)

அரசாங்க நிர்வாக சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகளில் பொது நிர்வாக அமைச்சு ஈடுபட்டிருப்பதாக அமைச்சின் ஊடகப் பணிப்பாளரான நிமால் டீ கமகே தெரிவித்துள்ளார்.

4 மாதங்களுக்கு முன்னர் வெளியான நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 216 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழஙகப்படவுள்ளன. வட-கிழக்கு மாகாணம் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் வழங்கப்படவுள்ள இந்நியமனங்களில் மாவட்ட ரீதியாக எத்தனை பேர் நியமிக்கப்படுவார்கள் என்பது அடுத்த வாரம் முடிவு செய்யப்பட்டுவிடும்.

நாடாளுமன்றத்தில் பொது நிர்வாக அமைச்சர் உறுதியளித்ததன்படி, அடுத்த இரு வாரங்களுக்குள் 216 பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்படும் எனவும், தற்போது நாடு முழுவதும் 686 நிர்வாகசேவை வெற்றிடங்கள் உள்ளதாகவும் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சின் ஊடகப்பணிப்பாளர் கமகே தெரிவிததார்.

# நீதிமன்றத்தீர்ப்பைக் கண்டித்து கல்முனையிலும் மக்கள் பேரணி!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைக் கண்டித்து நேற்று முன்தினம் காலை கல்முனையில் மாபெரும் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

இப்பேரணி பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

அங்கு பிரதேச செயலாளரிடம் - தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதை வாபஸ் பெறுமாறு கோரியும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அங்கு கண்டனக் கூட்டமும் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரையாற்றினர். பேரணியிலும் கூட்டத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# வட-கிழக்கு மாகாணசபையில் நடந்த நிதி மோசடி அம்பலம்!

## மூன்று அதிகாரிகள் பொலிசாரால் கைது

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாணசபையில் நடந்த பெரும் நிதிமோசடி அம்பலத்திற்கு வந்துள்ளது. இதுவரை நடைபெற்ற பொலிஸ் விசாரணைகளிலிருந்து 74 லட்சம் ரூபா மோசடி செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்நிதி மோசடி தொடர்பாக கணக்காளர் மற்றும் இரண்டு லிகிதர்கள் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பிணையில் செல்ல அனுமதி கோரிய போதிலும் நீதிமன்று இவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கவில்லை. தொடர்ந்து நடைபெறும் விசாரணைகளில் மாகாண சபையின் மேலும் சில அதிகாரிகள் சிக்கலாம் எனவும் தெரியவருகிறது (04)

## கல்கத்தா நகரில்

# சட்ட விரோத தொலைபேசி இணைப்பு வழங்கியவர் கைது!

## இலங்கையைச் சேர்ந்தவராம்

சட்டவிரோதமான முறையில் தொலைத்தொடர்பு வலயமொன்றை உருவாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கல்கத்தா நகரப் பொலிசார் இலங்கையர் ஒருவரைக் கைது செய திருக்கிறார்கள். பேர்டினன்ட் சிறிகாந் என்ற 32 வயதுள்ள இலங்கையரையே எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

இவருடன் சம்பந்தப்பட்ட மற்றுமொரு இலங்கையர் தலைமறைவாகியுள்ளார். வாடிக்கையாளர்களுக்கு ஐ.எஸ்.டிதொலைபேசி வசதிகள் வழங்கும் வகையில் அவர்கள் கல்கத்தா நகரில் இந்த வசதிகளை ஏற்படுத்தியிருந்தார்கள்.

தொலைத் தொடர்பு அதிகார சபையை மீறி இவர்கள் தொலைபேசி அழைப்புக்களைப் பெற்று செய்திகளை அனுப்பி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களிடமிருந்து 47 செலூலர் தொலைபேசி உட்பட, நவீன செய்மதித் தொலைத்தொடர்புக் கருவிகளும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.



## ரமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.56 |
| சுபஹ் | 5.11 |
| உதயம் | 6.30 |
| லுஹர் | 12.26 |
| அஸர் | 3.48 |
| மஃரிப் | 6.20 |
| இஷா | 7.32 |



வாழை மரங்கள் வளர்ந்து குலை போடுவதுதான் வழமை. ஆனால் வாழையின் தண்டுப் பகுதியைக் கிழித்துக் கொண்டு குலை வெளிவருவது அபூர்வமானதொன்று. இச்சம்பவம் விதானையார் வீதி, ஈச்சமோட்டையிலுள்ள சுரேஸ்குமார் என்பவரது வாழைத்தோட்டத்தில் நிகழ்ந்துள்ளது. இதனை அப்பகுதியிலுள்ள மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். இந்த அபூர்வ வாழையைப் படத்தில் காணலாம்.

*படமும் தகவலும்: மோகன்ராஜ்*

(58)

# தமிழீழத் தேசியத் தலைவரின் செய்தியிலிருந்து...



## இதயக் கோயிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்

எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்கள் அல்ல, இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்து சக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக்கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள்; சுதந்திரச் சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்துக்காக, கௌரவத்துக்காக பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் (தியாகிகள்) காலங்காலமாக எமது இதயக்கோயிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்துக்காக வாழ்பவன்; தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன்; மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன்; சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது; அர்த்தமுள்ளது; சுதந்திரமென்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகின்றான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப் பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

## தமிழீழ மாவீரர் நாள் நவம்பர்–27

தமது இன்னுயிரை ஈந்து, தமிழீழ விடுதலைப்போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள், அவர்களின் தலைமுறையிலேயே போற்றப் படவேண்டும். அவர்களின் வீரங்களும், ஈகங்களும் , அருஞ்செயல்களும் மக்களிடம் எடுத்துச் சொல்லப்படவேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும், குடும்பத்தினர்களும் அவலப்படக்கூடாது என்ற நோக்கின் அடிப்படையில், எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானதுதான் தமிழீழ மாவீரர் நாள். தமிழீழ விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து, உரமாகிப்போன மாவீரர்களின் எண்ணிக்கை 10, 100 என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில், ஒவ்வொரு மாவீரரையும் தனித்தனியாக ஆண்டுதோறும் அவரவர் நினைவுநாட்களில் நினைவு கூர இயலாது என்ற நிலையில், அனைவரும் ஒரேநாளில் நினைவு கூரக்கூடியதாக தமிழீழ விடுதலைப் போரில் முதற் களச் சாவடைந்த எமது இயக்க வீரர் லெப்ரினன்ட் சங்கரின் (சத்தியநாதன்) நினைவு நாளான நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாகத் தேர்ந்தெடுத்த எமது தலைவர் 1989ஆம் ஆண்டில் தமிழீழ மாவீரர் நாளை அறிவித்தார்.

விடுதலைப் போராட்டத்தில் உலகம் வியக்கும் வகையிலே புதிய வரலாறு படைத்து புதுமை சேர்த்து நிற்கும் எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள், மண்மீட்பு போரிலே பல வெற்றிகளைக் குவித்து வரும் அதேநேரம் - நாட்டை எல்லாத் துறைகளிலும கட்டியெழுப்புவதற்கான திட்டங்களைத் தீட்டி, வழிகாட்டி இயங்கி வருவதோடு, தூய்மையான தேசிய விடுதலைப் போரை வீறோடு நடாத்தி, வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களைப் போற்றி நினைவில் நிறுத்தவும், அவர்களது பெற்றோரும் குடும்பத்தினரும் அல்லலுறும் நிலையை மாற்றவும் எனப் பல்வேறு திட்டங்களை தீட்டிச் செயற்படுத்தி வருகின்றார்.

1989 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் நாளை முதலாவது தமிழீழ மாவீரர்நாளாக தமிழீழம் உணர்வார்ந்த நிலையில் கடைப்பிடித்தது. அன்றிலிருந்து தமிழீழத்தின் மிகப் பெரிய நிகழ்வாக தமிழீழ மாவீரர் நாள் தமிழீழ மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய நாடுகளில் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுவதற்கும், தமிழீழ மாவீரர் நாளைக் கடைப்பிடிப்பதற்கும் பெரும் வேறுபாடுகள் உண்டு. ஏனைய நாடுகளிலெல்லாம் விடுதலைக்குப் பின்னமைந்த அரசுகளால் விழா எடுக்கப்படுகின்றனவே தவிர, போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் விழாக்கள் எடுக்கப்படுவதில்லை. ஆனால் விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிலையிலும், எதிரியின் அச்சுறுத்தல்கள், தாக்குதல்களுக்கிடையிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையிலும் போராட்டத்தையும் நடாத்திக்கொண்டு தமிழ்மக்கள், மண்ணின் விடிவுக்காகத் தம் இன்னுயிரை ஈந்த மாவீரர்களை எழுச்சியோடு நினைவு கூர்ந்து வருகின்றனர்.

வீரச்சாவடையும் தமிழீழ மாவீரர்களது வித்துடல்கள் மாவீரர் துயிலும் இல்லங்களில் கல்லறைகளில் விதைக்கப்பட்டும், நடுகற்கள் நாட்டப்பட்டும் வழிபாடியற்றப்படுகின்றன. மாவீரர் நாளில் மாவீரர்களின் பெற்றோர், குடும்பத்தினர் மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டு, அன்று தமிழீழ மக்களால் போற்றி மதிப்பளிக்கப்படுகின்றனர். உலகில் எங்குமே தமிழீழ மாவீரர் நாள் நினைவு போல மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள், அவர்களின் பெற்றோரும் குடும்பத்தினரும் போற்றப்பட்டு மதிப்பளிக்கப்படும் நிகழ்வுகள் நடைபெற்றதாகவோ, நடைபெறுவதாகவோ வரலாறில்லை.

# இந்திய மீனவர்களால் அபகரிக்கப்பட்ட வலைகளை மீட்க நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களினால் அபகரித்துச் செல்லப்பட்ட வட பகுதி மீனவர்களின் கடற்தொழில் உபகரணங்களை மீட்டெடுப்பதற்கு முயற்சி எடுகக்கப்பட்டு வருகின்றது.

அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கைகள் காரணமாக, வடக்குக் கடற்பரப்பில் காணப்பட்ட வடபகுதி மீனவர்களின் உபகரணங்கள் பல சேதப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் பெருந் தொகையான கடற்றொழில் உபகரணங்கள் இந்திய மீனவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் அண்மைக் காலங்களில் அதிகமாக நடைபெற்று வருகின்றது. கடந்த வாரத்தல் மட்டும் வல்வெட்டித்துறை கடற்பரப்பிலிருந்து சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை இந்திய மீனவர்கள அபகரித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறான பல சம்பவங்களின் போது அபகரித்துச் செல்லப்பட்ட அதிகளவு வலைகள் தற்போது தமிழகக் கடற்கரைப் பிரதேசங்களில் செயற்படும் பல கடற்றொழில் சங்கங்களிடம் உள்ளன. இவற்றை மீட்டெடுப்பதற்கும் தற்போது முயறசி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக பாம்பன் பகுதியில் செயற்படும் கடற்தொழில் சங்கத்தின் தலைவர் அருளானந்தம் என்பவருடன் வடமாகாணக கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தலைவர் நவரத்தினம் தொடர்பு கொண்டுள்ளார்.

மிகவிரைவில் மேற்படி கடற்தொழில் உபகரணங்களை மீட்டுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது. இவ்விடயம் தொடர்பாக இந்தியத் தூதரகத்துடனும் தொடர்பு கொள்ளப்படவிருக்கிறது. (க,லி)

## அனாதரவான பெண் சிசு பிரபல வர்த்தகரால் தத்தெடுப்பு!

(வடமராட்சி)

மந்திகை மருத்துவமனையில் பராமரிப்பிலிருந்த பெண்சிசு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவருக்கு தத்துக்கொடுக்கப்பட்டது.

தும்பளை லூர்து மாதா தேவாலயத்துக்கு அண்மையில் அனாதரவாகக் காணப்பட்ட இக் குழந்தை பொலிசாரினால் மீட்கப்பட்டு நீதி மன்றின் பணிப்பின் பேரில் மந்திகை மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வந்தது.

இந்தக் குழந்தையை தத்து எடுப்பதற்கு 26 பேர் விண்ணப்பம் செய்திருந்தனர். இவ்விண்ணப்பங்களை பரிசீலனை செய்து செம்மணி வீதியைச் சேர்ந்த ஒரு பிரபல வர்த்தகருக்கு பெண் சிசு தத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.(23)

## திறந்த பல்கலைக்கழக எந்திரவியல் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்!

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம் "எந்திரவியல் தொழில்நுட்பம்" கற்கை நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விண்ணப்பப் படிவங்களை பிறவுண் வீதி கொக்குவிலில் உள்ள - இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொழில்நுட்பவியலில் டிப்ளோமா, தொழில்நுட்பவியலில் இளமானி, தொழில்நுட்பவியலில் பட்டப்பின் டிப்ளோமா, தொழில்நுட்பவியலில் முதுமாணி, ஆராய்ச்சி மூலம் தத்துவத்தில் முதுமாணி பட்டம், தததுவத்தில் கலாநிதிப்பட்டம், தொழிற்துறை கல்விச் சான்றிதழ், தொழிற்துறைக் கல்வியில் டிப்ளோமா ஆகிய கற்கைநெறிகளுக்கான அறிமுகக் கருத்தரங்கு ஒன்று 17 ஆம் திகதி காலை 9.30 யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கை நடாத்துவதற்காக கொழும்பில் இருந்து எந்திரவியல் பீட உயர் அதிகாரிகள் வருகை தரவுள்ளனர்.

எனவே பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எந்திரவியல் துறையில் தொழில் புரிய விரும்பும், தற்போது தொழில் புரிவோர் ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயனடையுமாறு யாழ்.பிராந்திய இயக்குனர் ஆ.ஞானேந்திரன் அறிவித்துள்ளார்.

## தமிழீழ மீட்புநிதி கடன் மீளல் - 2002

***நேற்றைய தொடர்ச்சி.....***

வெளியகல்வு

| | | |
|---|---|---|
| 105. | யா/வெ/690 | திரு.சிவசுப்பிரமணியம் அரியரட்ணம் |
| 106. | யா/வெ/694 | திரு.சதாசிவம் நவரத்தினராசா |
| 107. | யா/வெ/695 | திரு.செல்லையா மகேஸ்வரன் |
| 108. | யா/வெ/723 | செல்வி.உமாதேவி ஜெபனேசன் |
| 109. | யா/வெ/728 | செல்வி.மகேஸ்வரி கதிரமலைநாதன் |
| 110. | யா/வெ/729 | செல்வி.கமலநாயகி பொன்னையா |
| 111. | யா/வெ/731 | திரு.மாணிக்கம் பாலசுப்பிரமணியம் |
| 112. | யா/வெ/742 | செல்வி.இராசாத்தி கணபதிப்பிள்ளை |
| 113. | யா/வெ/760 | செல்வி.லலீலா கணேசலிங்கம் |
| 114. | யா/வெ/762 | திரு.இளையதம்பி நடராஜா |
| 115. | யா/வெ/781 | திரு.அருளானந்தன் புனனேசன் |
| 116. | யா/வெ/784 | திரு.பரராஜசிங்கம் சிறிபிரதாபன் |
| 117. | யா/வெ/804 | திரு.மயில்வாகனம் சுப்பிரமணியம் |
| 118. | யா/வெ/819 | செல்வி.இராசினி புஸ்பராசா |
| 119. | யா/வெ/828 | திரு.சின்னையா புலேந்திரன் |
| 120. | யா/வெ/831 | செல்வி.மகேஸ்வரி வேலாயுதர் |
| 121. | யா/வெ/836 | திரு.பொன்னம்பலம் திருச்செல்வம் |
| 122. | யா/வெ/865 | திரு.செல்லத்துரை சத்தியமூர்த்தி |
| 123. | யா/வெ/886 | செல்வி.வசந்தமல்லிகாதேவி பாலகிருஷ்ணன் |
| 124. | யா/வெ/891 | திரு.ஆனந்தசபாபதி மகேஸ்வரன் |
| 125. | யா/வெ/896 | திரு.இரத்தினம் இரத்தினசோதி |
| 126. | யா/வெ/897 | திரு.கந்தையா மகேந்திரசோதி |
| 127. | யா/வெ/930 | திரு.நல்லையா மகேஸ்வரன் |
| 128. | யா/வெ/938 | செல்வி.சரோஜினிதேவி பாலசிங்கம் |
| 129. | யா/வெ/946 | திரு.விசுவலிங்கம் சிவசுப்பிரமணியம் |
| 130. | யா/வெ/947 | திரு.பொன்னையா சுந்தரலிங்கம் |
| 131. | யா/வெ/949 | திரு.சரவணமுத்து பாலசிங்கம் |
| 132. | யா/வெ/956 | செல்வி.ரஜனி இராஜகுலேந்திரன் |
| 133. | யா/வெ/957 | செல்வி.பாக்கியலட்சுமி துரைரத்தினம் |
| 134. | யா/வெ/959 | செல்வி.செல்வமலர் அல்பேட் |
| 135. | யா/வெ/975 | செல்வி.சரஸ்வதி இராகுலன் |
| 136. | யா/வெ/984 | திரு.சுப்பையா விவேகானந்தன் |
| 137. | யா/வெ/985 | திரு.பிரான்சிஸ் யேசுதாசன் பேபியன் |
| 138. | யா/வெ/988 | செல்வி.ஜெயராணி ஆனந்தசபாபதி |
| 139. | யா/வெ/997 | திரு.இராமலிங்கம் சண்முகலிங்கம் |
| 140. | யா/வெ/1006 | செல்வி.ஜெயந்தினி தவரஞ்சன் |
| 141. | யா/வெ/1048 | செல்வி.ஜெயகௌரி செந்தில்வேல்ராஜா |
| 142. | யா/வெ/1049 | திரு.முருகேசு இராசரட்ணம் |
| 143. | யா/வெ/1060 | செல்வி.ராணி தீனதயாளன் |
| 144. | யா/வெ/1061 | திரு.பச்சைமுத்து சுப்பிரமணியம் |
| 145. | யா/வெ/1063 | செல்வி.லாலா கோபிறதா சிவனேசன் |
| 146. | யா/வெ/1113 | திரு.வேலுப்பிள்ளை கிருஸ்ணராஜா |
| 147. | யா/வெ/1124 | திரு.விசுவநாதப்பிள்ளை மனோகரன் |
| 148. | யா/வெ/1132 | திரு.கந்தையா கிருஸ்ணானந்தசிவம் |
| 149. | யா/வெ/1140 | செல்வி.நந்தினி சிறிதரதாஸ் |
| 150. | யா/வெ/1179 | செல்வி.இமெல்டாமகேஸ்வரி ஜெயக்குமார் |
| 151. | யா/வெ/1237 | திரு.சின்னத்தம்பி இராசையா |
| 152. | யா/வெ/1241 | திரு.செல்வராயன் செல்லப்பா |
| 153. | யா/வெ/1250 | செல்வி.பரமேஸ்வரி கந்தையா |
| 154. | யா/வெ/1265 | செல்வி.நந்தினி மனோகரன் |
| 155. | யா/வெ/1270 | திரு.நடராசா நவநீதன் |
| 156. | யா/வெ/1278 | திரு.இரத்தினம் தங்கராசா |
| 157. | யா/வெ/1279 | திரு.கேசவன் சற்குணம் |
| 158. | யா/வெ/1282 | திரு.சின்னப்பு சேனாதிராசா |

## நல்லூர் ஆன்மீகச் சொற்பொழிவு

ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடர்-14 நல்லூர் கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.5.30ற்கு நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் "மிண்டுமனத்தவர் போமின்கள்" எனும் விடயம் தொடர்பாக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## ஜே.வி.பி அலுவலகமும் அச்சகமும் பன்னிப்பிட்டியவில் தீவைப்பு!

(கொழும்பு)

மகரகம பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி அலுவலகமொன்றும், தலங்கமையில் உள்ள அந்தக் கட்சியின் அச்சகம் ஒன்றும் தீவைத்து கொழுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த இரண்டு தீவைப்புச் சம்பவங்களும் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றது. இந்த தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களின் மோட்டார் சைக்கிள் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

## மழையில் நனையும் 267 இலக்க பஸ் பயணிகள்!

(சுன்னாகம்)

பருத்தித்துறையில் இருந்து மானிப்பாய் ஊடாக நவாலிக்குச் செல்லும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 767இலக்க பஸ்ஸின் மேற்பகுதியில் துவாரங்கள் இருப்பதனால் - மழைநேரங்களில் அதில் பயணம் செய்யும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பாதையினூடாக பேருந்து ஒன்று மட்டுமே சேவையில் ஈடுபடுவதனால் இது தொடர்பாக போக்குவரத்துச் சபைக்கு அறிவித்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லையென பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (87)

## நவாலியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு!

### சந்தேகநபர் விளக்கமறியலில்

(சுன்னாகம்)

நாவாலி தெற்குப் பகுதியில் கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மானிப்பாயைச் சேர்ந்த சந்தேக நபரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு - மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவத்தில் திருட்டுப் போன மோட்டார் சைக்கிள் - நேற்று முன்தினம் சித்தங்கேணிப் பகுதியில் வைத்து மானிப்பாய் பொலிசாரால் மீட்கப்பட்டு - திருட்டுடன் தொடர்புபட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டதுடன் 85 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளும் உரியவரிடம் கையளிக்கப்பட்டது. (87)

## திருமலையில் கைதான புலிகள் வெள்ளியன்று நீதிமன்றில் ஆஜர்!

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை - மூதூர் கடற்பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஆறு விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களும் நாளை வெள்ளிக்கிழமை திருமலை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

முன்னதாக கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு இருவார கால விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு நமது ஈழநாட்டின் இலவசப் பிரதிகள்!

யாழ்.மாவட்டத்திலுள்ள 50 சனசமூக நிலையங்களுக்கு

'நமது ஈழநாடு'

ஒரு மாதகாலத்திற்கு இலவசப்பிரதிகளை அனுப்பவுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்

கீழுள்ள கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எதிர்வரும் 15.11.2002 ற்கு முன்னதாக

'நமது ஈழநாடு'

***267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.***

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

* குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 50 சனசமூக நிலையங்களின் விபரம் 17ஆம் திகதிய நமது ஈழநாட்டில் வெளியாகும்.
* தேர்ந்தெடுக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு வரும் 20.11.2002 இலிருந்து 20.12.2002 வரை இலவசப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

நமது ஈழநாடு இலவசப் பிரதித் திட்டம்

சனசமூக நிலையத்தின் பெயர் : ....................................

பதிவு இலக்கம் : ....................................

முகவரி : ....................................

நூல் நிலைய வசதி : உண்டு / இல்லை

இலவசப்பிரதியை பெறக்கூடிய அருகிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகை முகவர் : ....................................

.............................. தலைவர்/ செயலாளர் ஒப்பம்

.............................. திகதி

# வரவு செலவுத் திட்டம் - 2003

## ஓர் ஆய்வு

பகுதி 1

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தின் 17ஆம் பிரிவிற்கமைய நாட்டின் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றமானது பொது நிதி மீதான பூரண கட்டுப்பாட்டினை கொண்டுள்ளது. பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடனேயே வரியை அமுல்படுத்தும் அதிகாரமானது அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று வசூலிதத வரியை பாராளுமன்றத்தின் அங்கீகாரம் இன்றி செலவு செய்ய முடியாது. எனவே அரசாங்கத்தின் பொது நிதியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு அமுல்படுத்தப்படுகின்றது.

முதலாவதாக, 1978ஆம் ஆண்டு அரசியல்யாப்பு 17ஆம் பிரிவிற்கு அமைய திரட்டு நிதியை சேர்த்தல், கட்டுப்படுத்துதல், திரட்டு நிதியில் இருந்து நிதியை மீளப்பெறுதல், எதிர்பாராத செலவு நிதியை ஏற்படுத்துதல் போன்றவை தொடர்பில் பாராளுமன்றம் கட்டுப்பாடுகளை கொண்டுள்ளது.

இரண்டாவதாக ஆண்டுப் பகிர்வுச் சட்டத்தின்படி The Annual Appropriation Act திறைசேரியின் அறிவுறுத்தல்களுக்கமைய நாட்டினது வருடாந்த வருமானங்கள், செலவு களை மதிப்பீடு செய்து தயாரிக்கும் வேலை சகல திணைக்களங்களினதும் அமைச்சுக்களினாலும் வருடந்தோறும் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டுவிடும். இம் மதிப்பீடானது சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சிற்கூடாக திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்படும். திறைசேரியானது நாட்டில் உள்ள சகல திணைக்களங்களினதும் அமைச்சுக்களினதும் மதிப்பீடுகளை ஆராய்ந்து சீர்திருத்தி வரப்போகும் ஆண்டுக்குரிய ஓர் திரட்டிய மதிப்பீட்டைத் தயாரிக்கும் இந்த ஆண்டு மதிப்பீட்டில் வருமான மதிப்பீடு, மூலதனச் செலவு மதிப்பீடு, நடைமுறைச்செலவு மதிப்பீடு என்பன உள்ளடக்கப்பட்டிருக்கும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட ஆண்டு மதிப்பீடு நிதியமைச்சரினால் நவம்பர் மாதம் முற்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்படும் நாட்டின் வரவு செலவுத் திட்டமானது முதலாவது வாசிப்பு, இரண்டாவது வாசிப்பு, குழு நிலை விவாதம் என்ற மூன்று கட்ட விவாதங்களினால் பாராளுமன்ற அங்கத்தவர்களினால் விவாதிக்கப்பட்டு, பின் மேலதிக வாக்குகளால் இந்த மதிப்பீடு ஆண்டுப் பகிர்வுச் சட்டத்தின் மூலம் ஆண்டு இறுதியில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்படும். இவ்வாறு 2003ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பொருளாதாரக் காரணிகளை இனங்கண்டு அவற்றினை ஆய்வு செய்வதே இங்கு முக்கிய நோக்காக உள்ளது. முதலில் வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பொருளாதாரக் காரணிகளை இனங்காண்போம்.

2001ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) -1.4% இனை காட்டியது. அத்துடன் அக்காலப்பகுதியில் நாட்டின் பணவீக்கமானது 14.2% இனை காட்டியது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையானது 10.9% ஆகக் காணப்பட்டது. இலங்கையில் ஒவ்வொரு மனிதனும் 77,500 ரூபா கடனை தனது தலையில் சுமக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டான். இவ்வாறான பொருளாதாரத் தேய்வினை இலங்கை அடைவதற்கு பின்வரும் காரணங்கள் கற்பிக்கப்பட்டன.

1. வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வந்த 20 வருட யுத்தம்

2. திறன் அற்ற பொருளாதாரக் கொள்கைகளும், வினைத்திறன் அற்ற பொருளாதார முகாமையும் ஆகக் காணப்பட்டன.

ஆனால் 2002ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமானது நாட்டில் ஏற்படுத்திய சமாதானச் சூழலினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 3% ஆக மதிப்பிடப்பட்டது. பணவீக்கமானது 9% ஆகக் குறைவடைந்தது. 2002ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (Gross Domestic product - GDP) 8.9% ஆகக் காணப்பட்டது. இத்தகைய நிலைப்பாடுகள் 2002ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் காணப்படுகின்றன.

இந்நிலையில் 2003ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டமானது அரசாங்கத்தின் 3 வகையான நோக்கங்களை இலக்கு வைத்து செயற்பட உள்ளதாக நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

அ) மக்களின் தலைக்குரிய கடன் சுமையைக் குறைத்தல்

ஆ) பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதாக அமைகின்றது.

இ) தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதாகவும், வருவாய் வழிகளை அதிகரிப்பதாகவும் இந்நோக்கங்கள் காணப்படும்.

கடந்தகாலப் பகுதியில் நாட்டின் மொத்தப் படுகடனின் அளவானது

1994 இல் 550 பில்லியனாக இருந்தது. இது 2001 இல் 1450 பில்லியன் ஆக அதிகரித்துக் காணப்பட்டது.

இன்றுள்ள படுகடனின் அளவானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 105% ஆக காணப்படுகின்றது. 2002 இல் படுகடன் வட்டியின் அளவானது 118 பில்லியன் ஆகக் காணப்படுகின்றது. இவ் ஆண்டுக்கான கடன் தவணைப்பணமாக 38 பில்லியன் வெளிநாட்டு கடனும் 130 பில்லியன் உள்நாட்டுக் கடனும் காணப்படுகின்றது.

கடன் சேவை கட்டணமாக 286 பில்லியன் காணப்படுகின்றது. அரசாங்கத்தின் வருமானமாக 262 பில்லியன் காணப்படும்போது கடன்



சேவைக் கட்டணம் Dept service payment மட்டும் 286 பில்லியன் ஆகக் காணப்படுவது நாடு எவ்வளவு தூரம் கடன் பழுவினைக் கொண்டுள்ளது என்பதனை இனங்காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையில் நாட்டு மக்களுக்குத் தேவையான நலன் சேவைகளையும், பொருளா தார அபிவிருத்தித் திட்டங்களையும் அரசாங் கத்திடம் இருந்து மக்கள் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு அரசாங் கத்தின் நிதி நிலைமை இன்று மோசமாகக் காணப்படுகின்றது. இந்நிலையில் அரசாங்கமானது இப்படுகடன் அளவினைக் குறைப்பதற்கு இரண்டு வழிகளை நாடியுள்ளது.

முதலாவது - புதிய வரவு செலவு திட்டத்தின் பற்றாக்குறையை நீக்க வேண்டும்.

இரண்டாவது - அரசுடமை சொத்துக்களை விற்று கடனை அடைக்க வேண்டியுள்ளது. மேற்குறிப்பிட்ட இரு வழிகளைக் கைக்கொள்ளாவிடில் அரசிற்கு வேறு ஓர் மாற்று வழி மட்டுமே உள்ளது. அதாவது அரச வரி வருமானங்களை உயர்த்துவதன் மூலம் அதிகளவு அரசிறையை பெறுதல். இவ்வழியானது நாட்டின் பொருட்கள் சேவைகளின் விலை மட்டத்தினை அதிகரிப்பதோடு பணவீக்கத்தின் உயர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

இத்தகைய பொருளாதார பின்னணியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய வரவு செலவுத் திட்டத்தின் புதிய பிரேரணைகளை ஆராய்வோம்.

### புதிய வரித் திட்டங்கள்

முன்னைய காலப்பகுதியில் காணப்பட்ட G.S.T, NSL வரிகள் நீக்கப்பட்டு VAT வரிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ACT வரியானது 2002ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்போது நீக்கப்பட்டுவிட்டது. வருமானவரிக்கான அபராத வரி Surcharge on income tax என்பனவும் இல்லா தொழிக்கப்பட்டது. வருமான வரிக்கான எல்லை 1லட்சத்து 44 ஆயிரம் ரூபாவில் இருந்து 2லட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் செயற்பாடுகளை வினைத்திறன் ஆக்குவதற்கும் வரி வருமானங்களை திறமையாகத் திரட்டிக் கொள்ளவும் பல புதிய திட்டங் கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதிய வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் 2003இல் இருந்து சேர்த்து கொள்ள உள்ள அரச சேவை உத்தியோகத்தர்களுக்குப் பங்களிப்பு அடிப்படையி லான ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படையிலேயே ஓய்வூதியம் வழங்க உள்ளது. அதாவது 8% உத்தியோகத்தர்களின் பங்களிப்பும், அரசாங்கம் 12% ஆன பங்களிப்பினையும் வழங்கவுள்ளது. இதன் அடிப்படையில் அரசாங்க சேவை உத்தியோகத்தர்களது சம்பளங்கள் மாற்றியமைக்கப்பட உள்ளது. தற்போது அரசாங்கம் 550 பில்லியன் ரூபாவை ஓய்வூதியமாகச் செலுத்த வேண்டிய கடமைப்பாட்டில் உள்ளது. எனவே தற்போது அமுல்படுத்தவுள்ள புதிய திட்டத்தின் பிரகாரம் இவ் ஓய்வூதியச்சுமை எதிர்காலத்தில் குறைக்கப்படும்.

### அரச நிர்வாக மீள் கட்டமைப்பு

அரச நிர்வாகத்தின் கட்டமைப்புக்கள் யாவும் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளது. இம் மீள்பரிசீலனை செய்முறையானது இரட்டைத் தன்மை செயற்பாடுகளை குறைப்பதுடன் அரச சேவைகளுக்கான வெற்றிடங்கள் நீக்கப்பட்டு புதிய ஆட்சேர்ப்புகள் யாவும் திட்டமிட்ட வகையில் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே மேற்கொள் ளப்படவுள்ளது. திஸ்ஸ தேவேந்திர சம்பள ஆணைக் குழுவின் சிபார்சின் அடிப்படையில் அரச ஊழியர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. அத்துடன் நடுத்தர, கீழ்மட்ட ஊழியர்களின் எண்ணிக்கையானது 30% இனால் குறைக்க இவ் ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது. ஆனால் இவ்வாறான ஆட்குறைப்பானது வேலையில்லாப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் என்பதனால் இதனை உடனடியாக மேற்கொள்ள முடியாது.

### தனியார் மயமாக்கல்

அரசாங்கம் அரச சேவையில் உள்ள நட்டமடையும் நிறுவனங்களை தனியார் மயமாக்க உள்ளது. அமைச்சுக்களின் அனுமதியுடன் அரச நிறுவனங்களை மீளமைப்புச் செய்யும் குழு ஆனது (Public Enterprises Reform Commission) ஆனது தனியார் மயமாக்கலைத் தொடர்ந்து மேற்கொள்ளவுள்ளது.

பலவத்த சீனிக் கம்பனி, செவனகலை சீனிக்கொம்பனி, லங்கா மரைன் சேர்விசஸ் மற்றும் சில பஸ் கம்பனிகளும் ஏற்கனவே தனியார் மயமாக்கப்பட்டு விட்டன. மேலும் இலங்கைத் தொலைத்தொடர்புச் சேவை, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பனவும் தனியாருக்குப் பங்குகளை விற்க உள்ளன.

*(தொடரும்)*

எஸ்.வசந்தகுமார்




## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| முருங்கைக்காய் | * | 40/- | 50/- | 20/- | 30/- | * | 40/- |
| வெங்காயம் | 50/- | 40/- | 40/- | 55/- | 55/- | 40/- | 50/- |
| பச்சை மிளகாய் | 50/- | 40/- | 30/- | 30/- | * | 40/- | 40/- |
| கத்தரிக்காய் | 80/- | 80/- | 40/- | 70/- | 70/- | 80/- | 60/- |
| பாகற்காய் | 80/- | * | 80/- | 80/- | 70/- | 60/- | 80/- |
| பயிற்றங்காய் | 50/- | 40/- | 40/- | 50/- | 60/- | 45/- | 40/- |
| வெண்டிக்காய் | 40/- | 35/- | 12/- | 30/- | 20/- | 20/- | 20/- |
| உருளைக்கிழங்கு | 80/- | 75/- | 90/- | 80/- | 70/- | 80/- | 80/- |
| பீற்றூட் | 20/- | 20/- | 10/- | 20/- | 10/- | 20/- | 20/- |
| கரட் | 60/- | 40/- | 40/- | 40/- | 40/- | 40/- | 40/- |

# விவசாய விரிவாக்கத்தில் கவனம் செலுத்தினால் யாழ். மண்ணில் இன்னும் சாதனை படைக்கலாம்!



விவசாயத் தொழிற்துறை எனும்போது, அது ஒரு பக்கத்தில் விவசாய உற்பத்திக்கான (உள்ளீடுகைகள், வாகனப் போக்குவரத்து, களஞ்சியம் போன்றன) கைத்தொழில்களையும், மறுபக்கத்தில் விவசாய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களையும் குறிக்கும். இங்கு விவசாய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழிலுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரம் நீண்டகால பாரம்பரியமிக்க விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. ஆயினும் ஒரு விவசாயத் தொழிற்துறை நோக்கிய விரிவாக்கம் இங்கு குறிப்பிடும்படியாக அபிவிருத்தியுறவில்லை எனலாம். அதாவது, விவசாய மூலவளமானது அதிக வருமானம் தரத்தக்க விவசாய அடிப்படையிலான கைத்தொழில்துறை நோக்கி இன்றுவரை சரியாகத் திசை திருப்பப்படவில்லை என்பதே இதன் கருத்தாகும். இலங்கையில் நூற்றாண்டிற்கு மேற்பட்ட வளர்ச்சியைக் கண்ட பெருந்தோட்ட விவசாயத்துறை கூட பண்ட உற்பத்திக் கட்டத்திலிருந்து பதனிடல் கட்டத்திற்குக் கூட இங்கு முறையாக அபிவிருத்தி பெறவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இப்பிரதேசத்தில் அதிகம் பரந்துள்ள விவசாயக் கைத்தொழில் நெல்லரைக்கும் ஆலைத் தொழிலாகும். பாரம்பரிய வகை ஆலை, ஓரளவு நவீனவகை ஆலை, நவீன வகை ஆலை என இவை கிராமம் தொட்டு நகரம் வரை பரந்துள்ளன. மொத்த நெல் ஆலைகளில் 80 வீதமானவை பாரம்பரிய ஆலைகளே. நெல்லை அரிசியாக மாற்றும் ஒரு சிறுபதனிடல் முயற்சியை மேற்கொள்ளும் இப்பாரம்பரிய ஆலைகள் அதிக தீமையையே விளைவிக்கின்றன.

அவையாவன:-

1) அரிசி அதிகளவுக்கு உடைக்கப்படுகின்றது. 2) அரிசியில் அசுத்தங்கள் காணப்படும் வாய்ப்பு அதிகம் உள்ளன. 3) தவிடு சரியாக நீக்கப்படுவதில்லை. 4) புழுங்கல் அரிசியை மட்டுமே இவை அரைக்கின்றன. 5) ஆலையை இயக்கும் வலு நுகர்வில் சிக்கனம் இல்லை. நவீனவகை ஆலைகள் மேற்படி குறைகளை நிவர்த்திக்கவல்லன. எனவே இங்கு நெல்லரைக்கும் ஆலைகளை நவீனமயப்படுத்துதல் அவசியமாகும். இது இலங்கையின் மொத்த நெல்விளை பரப்பில் 35 வீதமாகும். (மொத்தம் 100 எனில் 65 வீதம் கிழக்கு மாகாணம், 35 வீதம் வடமாகாணம்) இதனால் நெல்லரைக்கும் ஆலைகளை எவ்வகையிலே விரைவாக நவீனமயப்படுத்தலாம் என்பது பற்றி நாம் அதிக கவனமெடுத்தல் வேண்டும்.

அரிசியை எவ்வாறு அதிக லாபம் தரும் கைத்தொழிலாக மாற்றலாம் என்பதற்கு 'நெசில்ஸ்' உற்பத்திகளாக வரும் நெஸ்டம் (Nestum), போளின் (Forline) ஆகிய குழந்தை உணவுப் பொருட்களே தகுந்த எடுத்துக்காட்டுக்களாகும். மேற்படி உணவுப் பொருட்களில் இரு கைப்பிடியளவான அரிசியோ, கோதுமையோதான் மூலப்பொருட்களாக உள்ளன. அத்துடன் சில ஊட்டச்சத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதனைப் பெறுவதற்கு மிக அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது. இவ் அதிக விலையை அப்பொருள் பெறுவதற்கு அது கைதொழில் மயப்படுத்தப்பட்டு, பல செயல்முறைக்குட்படுத்தப்பட்டு உற்பத்தி செய்யப்படுவதே காரணமாக அமைகின்றது. எனவே விவசாய உற்பத்திகளைக் கைத்தொழில் மயப்படுத்தும் போது நாம் அதிக வருமானம் பெறமுடியும்.

தெங்குத் தொழில் ஒப்பீட்டளவில் கைத் தொழில்மயமாக்கப்பட்டுள்ளதெனலாம். தேங்காய்த் துருவல், தேங்காய் எண்ணெய், சவர்க்காரம், மாஜரின், விணாகிரி போன்ற உற்பத்திகளும் தும்புத் தொழில் போன்ற தொழில்மயமாக்கப்பட்ட உற்பத்திகளும் தேசிய மட்டத்திலே ஓரளவு அபிவிருத்தியை எய்தியுள்ளன. ஆனால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இவை குறிப்பிடும்படியான அபிவிருத்தியை இன்னும் எட்டவில்லை. தெங்குத்தொழில் அபிவிருத்திக்கான நிறைய வாய்ப்புகள் இங்குள்ளன. தெங்குத் தொழில் அபிவிருத்தியானது கிராம மட்டங்களிலே இடம்பெறுவதால் அதிக பயனை விளைவிக்கத்தக்கவை. முக்கியமாக கிராம மட்டத்தில் பலருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கமுடியும். தெங்கினைத் தொழில் மயப்படுத்துவதோடு அதனை நவீனமுறைக் கைத்தொழில் உற்பத்திகளாக மாற்றுதலும் அவசியமாகும்.

இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யத்தக்க இன்னோர் முக்கிய விவசாய அடிப்படையிலான தொழிற்துறை சீனி உற்பத்தியாகும். கரும்பு, சில கிழங்கு வகைகள், பனை ஆகிய வளங்களிலிருந்து சீனி உற்பத்தி செய்யப்படலாம். இப்பிரதேசத்தில் தற்போது கந்தளாய், கல்லோயாவில் கரும்புச்சீனி உற்பத்தியாகின்றது. தேசியமட்டத்தில் வருடம் 3 லட்சம் தொன் சீனி நுகரப்படுகின்றது. ஆனால் 45,000 தொன் தான் உள்நாட்டில் உற்பத்தியாகின்றது. வறண்ட வலயத்தில் கரும்புச் செய்கையினை நல்ல முறையில் மேற்கொள்ளலாம். பாசன வசதிகள் அமைக்கப் பெற்றால் வருடம் முழுவதும் கரும்பு பயிரிடப்படலாம். அத்துடன் இப்பிரதேசத்தில் சீனி உற்பத்திக்கான பொருத்தமான கிழங்குவகைகள் எவையென ஆராய்ந்தறிந்து அவற்றினைப் பயிரிட்டு சீனி உற்பத்தியை அதிகரிக்க முடியும். மேலும் இப்பிரதேசத்தின் முக்கிய பாரம்பரிய வளமான பனைவளத்தை சீனி உற்பத்திக்குப் பயன்படுத்துவோமாயின் அதிக வருமானமும் வேலைவாய்ப்பும் ஏற்படுமெனக் கருதப்படுகின்றது. பனஞ்சீனி உற்பத்தியானது அதிக உற்பத்திச் செலவை வேண்டுகின்றது, முக்கியமாக எரிபொருட் செலவே அதிகமாக உள்ளது. சூரிய சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம் இச்செலவைக் குறைக்க முடியுமாயின் உற்பத்திச் செலவைக் குறைத்து பனைவளத்திலிருந்து இலாபகரமான முறையில் சீனியை உற்பத்தி செய்தல் சாத்தியமே. சீனி உற்பத்தியுடன் இணையாக மதுபான உற்பத்தியையும் அதிகரிக்கலாம். இவை ஏற்றுமதி செய்யத்தக்க வகையில் தரம் வாய்ந்தனவாக அமைதல் வேண்டும். பனை வள அபிவிருத்திச் சபை, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் போன்ற அமைப்புகளும், சமூகநலன் விரும்பிகள் சிலரும் பனைவள உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு அண்மைக்காலங்களில் அதிக முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டு வருகின்றன. பனைவளத்திலிருந்து பலவகையான அழகுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உல்லாசப் பயணத் தொழில் வளரும்போது இவ்வாறான உற்பத்திகள் அதிக வருமானத்தை ஈட்டித்தருமென நம்பலாம்.



எமது பிரதேசத்தில் அதிகளவு அபிவிருத்தி வாய்ப்பைக் கொண்ட இன்னோர் தொழிற்துறை விலங்கு வேளாண்மையாகும். வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் நல்லமுறையில் திட்டமிட்டு இவை மேற்கொள்ளப்படலாம். புல்வளர்த்து அதனை விலங்குகளுக்கு கொடுத்துப் பாலாகவும் இறைச்சியாகவும் பெறுவதில் அதிக வருமானம் கிடைக்கும். தினைவகைகளைக் கோழிகளுக்குக் கொடுத்து முட்டையாக இறைச்சியாக நுகர்வதில் அதிக பயன் உண்டு. புல்லும் தினை வகைகளுமே மேற்படி உற்பத்திகளின் விவசாய மூலவளங்களாகும். ஆடு, எருமை, பன்றி, முயல் இறைச்சிக்கான மாடு போன்றனவும் நல்ல முறையிலே எமது பிரதேங்களில் விரிவாக்கம் செய்யப்படலாம். கிராமம் ஒன்றில் மந்தை வளர்ப்பில் ஈடுபடும் ஒரு நவீன விவசாயி அதன் மூலம் பல நன்மைகளைப் பெறலாம். அவர் தனது வீட்டுத் தேவைக்கான உயிர்வாயுவை (Biogas) உற்பத்தி செய்யலாம். பயிர்களுக்கு உரம் பெறலாம். பால், இறைச்சி பெறலாம். இப்படி ஒன்றுடன் ஒன்று இணைவாக அபிவிருத்தியுறத்தக்க வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமப் பண்ணைத் திட்ட விருத்தியின் மூலம் அதிக பயன் பெற முடியும். இதற்குச் சிறந்த உதாரணம் மன்னாரில் அமைந்துள்ள 'ஸ்கந்தபாம்' ஆகும். தனிநபர் ஒருவரின் மேற்படி ஒருங்கிணைப்புப் பண்ணை அபிவிருத்தியானது பலருக்கு வழிகாட்டவல்லது. விலங்கு வேளாண்மை எமது பிரதேசத்தில் இன்றுவரை மிகவும் குறைந்த கவனிப்பையே பெற்றுள்ளது. இதனை ஒவ்வொரு கிராமமட்டத்திலும் அபிவிருத்தி செய்ய உழைத்தல் வேண்டும். வீட்டுக்கு ஒரு மாடு, சிறு கோழிப்பண்ணை, ஆடு என்பன வளர்க்க ஊக்கமளிக்கப்படுதல் வேண்டும். எமது கிராமங்களிலுள்ள வேலிகளை மதில்களாக மாற்றுவதை விடுத்து குழைதரக்கூடிய மரங்களை வேலிகளில் நாட்டி அதன்மூலம் விலங்கு வேளாண்மையை அதிகரிக்கச் செய்யவேண்டும். ஒவ்வொரு கிராமங்களிலும் சுயநிறைவுப் பொருளாதார வளமுள்ள கிராமக் குடும்ப அலகுகளை ஏற்படுத்துவதற்கு இவை பெரிதும் உதவும்.

பால் உற்பத்தியை இன்னும் நவீன தொழிற்துறை உற்பத்தியாக மாற்ற வேண்டுமாயின் அதனை புட்டிப்பால், பால்மா, பட்டர், சீஸ், ஐஸ்கிறீம், யோக்ஹட் போன்றனவாக மாற்றி உற்பத்தி செய்யலாம். இவை அதிக வருமானத்தை அளிக்கவல்ல உற்பத்திகளாகும். புல் வளர்ப்பில் இருந்து ஆரம்பமாகும் இத்தொழிற்றுறையின் விரிவாக்கமானது சந்தையின் விரிவுக்கேற்ப அதிக வருமானம் தரும் உற்பத்திகளாக வளர்ச்சி பெறத்தக்கவையாகும்.

வட-கிழக்கு மாகாணத்திலே 6.1 வீத நிலப்பரப்பைக் கொண்டதும், அப்பிரதேச, மொத்தக் குடித்தொகையில் 30 வீதத்தை உள்ளடக்கியதுமான யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதியே தோட்டச் செய்கை நன்கு வளர்ச்சியடைந்துள்ள பகுதியாக அமைந்துள்ளது. இப்பகுதியில் இலங்கையில் வேறு எப்பாகத்திலும் இல்லாதவாறு செறிந்த முறைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இங்குள்ளோர் நவீன விவசாயிகள் என கூறத்தக்கவர்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள் போல் நாட்டின் வேறு எங்கும் மிக விரைவாக நவீன அம்சங்களைப் பின்பற்றும் விவசாயிகளைக் காண்பதரிது, பாரம்பரிய முறையை உடனடியாகவிட்டு நவீன முறையைப் பின்பற்றக்கூடிய மனப்பாங்கு இங்குள்ள பெரும்பாலான விவசாயிகளிடம் காணப்படுகின்றது. இதனால் நவீனத்துவ முறைகளை இங்கு புகுத்துதல் எளிதாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே உள்ள தோட்டங்களில் புகையிலை, மிளகாய், பழங்கள், தினை வகைகள் என்பன பெருமளவில் விளைவிக்கப்படுகின்றன. இலங்கையின் உபஉணவு உற்பத்தியில் கணிசமான பங்கினை யாழ். குடாநாட்டு விவசாயிகளே உற்பத்தி செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, இலங்கையில் வெங்காயச் செய்கைக்கு உட்பட்ட பரப்பளவில் 38 வீதமும், மிளகாய்ச் செய்கைப் பரப்பளவில் 15 வீதமும் யாழ். குடாநாட்டிற்குள் அடங்குகின்றது. எனவே இந்த உற்பத்திகளை விவசாய அடிப்படையிலான கைத்தொழில் உற்பத்திகளாக விரிவாக்கம் செய்வது பற்றி நன்கு சிந்தித்துத் திட்டமிடுதல் இம்மண்ணை நேசிக்கும் அனைவரினதும் கடமையாகும். எடுத்துக்காட்டாக புகையிலை மூலவளத்தைக் கொண்டு சுருட்டுக் கைத்தொழில் விரிவாக்கத்துடன் மாத்திரம் நின்றுவிடாது, அதனை நவீனமுறையிலே சிகரட் உற்பத்தியாக மாற்ற முடியும். இதற்கான நவீன இயந்திரங்களைத் தருவித்து, சிகரட் புகையிலை உற்பத்தியையும் ஊக்குவித்து விவசாயத் தொழிற்றுறை விரிவாக்கம் செய்யப்படலாம்.

இப்பிரதேச விவசாய உற்பத்தியில் குறிப்பாக யாழ். குடாநாட்டு உற்பத்தியில் உணவு பதனிடல் தொழிற்றுறை நல்ல பயனை நல்குமெனலாம். இவற்றுள் முக்கியமாக பழங்கள் பதனிடல், தகரத்திலடைத்தல், காய்கறி பதனிடல் என்பவற்றின் விரிவாக்கம் பற்றி அதிகம் சிந்திக்கலாம். சில பருவ காலங்களிலேயே சில பழங்களும், காய்கறிகளும் அதிகம் விளைகின்றன. அக்காலத்தில் இவற்றின் உற்பத்திகள் நிரம்பலை அதிகம் ஏற்படுத்துகின்றன. அவற்றின் கேள்வி குறைந்து பழங்கள், காய்கறிகள் பெருமளவு பழுதடையும் நிலையும் தோன்றுகின்றது. எனவே பழங்களையும், காய்கறிகளையும் பாதுகாப்பாக வைப்பதற்கும், நீண்ட நாட்களுக்கு இன்னோர் வழியில் காப்புச்செய்து வைத்து பயன்படுத்துவதற்கும் சிறப்பான சில தொழில்நுட்ப உத்திகள் பயன்படுத்தலாம். அவற்றுள் சில பின்வருமாறு:

1. பாதுகாப்பாக நீண்ட காலம் வைத்திருக்கக்கூடிய களஞ்சியங்களை உருவாக்குதல் (மெழுகு பூசுதல் போன்ற நுட்பங்கள் மூலம் பாதுகாப்பளித்தல்)

2. உறையச் செய்வது அல்லது இரசாயனப் பாதுகாப்புச் செய்வது: (உ+ம் : பழங்களை பழச்சாறு, பழக்கூழ் வடிவிலோ, பல்வேறு வகைப் பழப்பானங்களாக உருமாற்றியோ பாதுகாக்கலாம்.)

3. ஊறவைக்கும் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துதல். (ஊறுகாய்)

4. உலர்த்துவதன் மூலம் பாதுகாத்தல். (வற்றல் போடுதல்)

இந்தவகையில் தற்பொழுது சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பழங்கள் பதனிடும் தொழிற்சாலையான 'ஜுசுபி' சிறிதளவு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

மேற்படி பாதுகாப்பு முறைத் தொழில் நுட்பங்கள் பல்வேறு நாடுகளில் நன்கு வளர்சசி பெற்றுள்ளன. அவற்றினைப் பின்பற்றி எமது பிரதேசத்திற்கு ஏற்றதான பொருத்தமான தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றி உணவு பதனிடல் தொழிற்றுறையை விரிவாக்குதல் வேண்டும். எமது பிரதேசத்தில் பேணிப் பாதுகாத்து சந்தைப்படுத்தக் கூடிய பழங்களென மாம்பழம், பலாப்பழம், தக்காளி, பப்பாசி, எலுமிச்சை, தோடை, விளாம்பழம், வாழைப்பழம், அன்னாசி, பனம்பழம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றை எவ்வழிகளில் பாதுகாத்தல் இலாபகரமானதென்பதற்கு ஆய்வுகள் அவசியம். ஒவ்வொரு பழவகையின் பாதுகாப்புப் பற்றியும் தனித்தனி ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும். பாதுகாத்துப் பயன்படுத்துவது இலாபம் தரத்தக்கதுதான் என்பதை நிச்சயித்த பின்னரே இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பழச்சாற்றினை அடிப்படையாகக் கொண்ட விவசாயத் தொழிற்றுறை உற்பத்திகளில் பானங்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட பழச்சாறுகள் போன்றன உடனடியாகப் பருகத் தக்கவையாகும். பழக்கூழினை அடிப்படையாகக் கொண்டவற்றில் ஜாம், ஜெலி, சட்னி, பழக்குழம்பு என்பனவும் முழுதாக அல்லது வெட்டப்பட்ட பழங்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளில் தகரத்தில் அடைக்கப்பட்ட பழவகைகள், ஊறுகாய் வகைகள் என்பனவும் அடங்கும். எமது பிரதேசத்திலுள்ள பல கிராமங்களிலே சில பருவங்களின்போது பழங்கள், காய்கறிகள் பெருமளவு உற்பத்தியாகின்றன. தேவைக்கதிகமான இப்பருவகால உற்பத்திகளில் பெரும் பங்கு வீணடிக்கப்படுகின்றன. பருவகாலம் அல்லாத காலங்களில் இவை அருமையாகவுள்ளதால் அதிக விலையாக உள்ளன. எனவே மேற்படி உற்பத்திகளின் நிரம்பலை ஒழுங்குபடுத்துவதற்கு, பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இதற்குப் பொருத்தமான மலிவான பாதுகாப்பு தொழில்நுட்ப முறைகளை விருத்தி செய்தல் அவசியம். இதற்கான பல ஆய்வுகளும், செய்திட்டங்களும் விரைவில் மேற்கொள்ளப்படுதல் நற்பலனை விளைவிக்குமெனலாம்.

பொதுவாக எமது பிரதேச விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் அதேநேரத்தில், அந்த உற்பத்திகளை அதிக வருமானம் தரத்தக்கவையாக நவீனத்துவம் கொண்டவையாக மாற்றுதற்கு விவசாயத் தொழிற்றுறை விரிவாக்கம் பற்றி நாம் அதிகம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். ஒரு நாடோ ஒரு பிரதேசமோ ஒரு கிராமமோ அபிவிருத்தியுறுவதற்கு மேற்படி அபிவிருத்திக்குரிய வழிமுறையே சுருக்கமான தந்திரோபாயமாகும். ஒரு விவசாய உற்பத்தியை சில செயல்முறைக்குட்படுத்தி வேறோர் உற்பத்தியாக அல்லது பலவாக மாற்றுதல், அவ்உற்பத்திகளை இன்னும் சில செயல்முறைக்குட்படுத்தி இன்னும் பலவாக மாற்றுதல் போன்ற தொழிநுட்ப நடவடிக்கைகளே விவசாயத் தொழிற்றுறை விரிவாக்கத்தின் பரிணாமமாகும். இதன் விளைவாக அதிக வருமானம் - இலாபம் கிடைப்பதோடு வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும். எனவே விவசாயப் பொருளாதார அடிப்படையிலான நாடுகள் விருத்தியுற மேற்படி அபிவிருத்தித் திறமுறையின்பால் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டப்பட வேண்டும்.

பேராசிரியர்
இரா. சிவச்சந்திரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

தனக்குத் தனக்கென சுளகும்
படக்குப் படக்கு எனும்.
- *தமிழ்ப் பழமொழி.*

# நமது நோக்கு

## முரண்பாடுகளின் உருவம்

எப்போது என்ன பேசுவார்? என்ன செய்வார்? என்று யாருக்குமே தெரியாத புதிராக விளங்குபவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

காலையில் ஒரு அறிக்கை வரும். பின்பு மாலையில், அதே அறிக்கையின் உள்ளடக்கத்திற்குப் பெரும் முரணாக இன்னொரு கருத்தரங்கில் அவர் பேசுவார். தான் வெளியிட்ட விடயத்தையே முற்றிலும் மறந்து போனவராக அவரது பேச்சு அமைந்திருக்கும்.

இத்தகைய முரண்நிலைகளுக்குள் வாழ்ந்துவரும் ஜனாதிபதி சந்திரிகா - தற்போது சமாதானப் பேச்சுகள் பற்றித் தனது கவனத்தை அதிகம் திருப்பி வருகின்றார்.

அண்மையில் - இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னராக - வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் குழுவினரைச் சந்திக்க மறுத்ததோடு மட்டுமல்லாது,

தான் அழைத்து வந்த நோர்வேத் தரப்பே தன்னைக் கைவிட்டுவிட்டதாகவும் குற்றஞ்சாட்டினார் ஜனாதிபதி.

இதன் பின்னர் - தொடர்ச்சியாக, விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் பற்றிய காட்டமான விமர்சனங்களையும், எதிர்ப்புணர்வுகளையும் வெளிப்படுத்தி வந்த அவர் -

திடீரென - பேச்சுவார்த்தையை வரவேற்பதாகக் கூற ஆரம்பித்துள்ளார்.

நேற்றுமுன்தினம், தனது ஜனாதிபதி ஆட்சியின் எட்டாவது ஆண்டு நிறைவையொட்டி, நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அவர் - இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை வரவேற்பதாகக் கூறியுள்ளார்.

ஆனால், அதேவேளை - கடந்த இரண்டொரு தினங்களுக்கு முன்னர் நடந்த, பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் - அமைதிப் பேச்சுக்கள் பற்றிய 'உண்மை நிலை'யை மக்களிடம் எடுத்துச் செல்ல, பெரும் பிரசார இயக்கமொன்றை ஆரம்பிக்குமாறு அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொண்டுள்ளார். அவரே நேரடியாக இந்த விடயத்தில் கவனமெடுக்கப்போவதாகவும் கூறினார்.

இவ்வாறு தனது நிலைப்பாடுகளிலேயே அடிக்கடி முரண்பட்டுக்கொள்ளும் ஜனாதிபதி - இறுதியாக எடுத்துள்ள 'சமாதானப்பேச்சு ஆதரிப்பு' கோஷத்தின் பின்னணி பற்றி ஆராயவேண்டியது அவசியமாகின்றது.

இதற்கு சில காரணங்களை முக்கியத்துவம் உடையதாகக் குறிப்பிடப்படலாம்.

முதலாவது - சமாதானப் பேச்சுக்கள், சர்வதேசத்தின் ஆதரவுடன் நடைபெறுவதாலும் உலகின் கவனமும் அதன் மீதே திரும்பியிருப்பதாலும் சர்வதேச அபிப்பிராயத்தை மீறி அல்லது அதனுடன் முரண்பட்டுக் கொள்ள ஜனாதிபதி சந்திரிகா விரும்பாதிருக்கலாம்.

இரண்டாவது - தெற்கில் கிளம்பியுள்ள அரசியல் நெருக்கடிகளில் புதிய தேர்தலொன்றைச் சந்திக்காமல் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் அவரது செயற்பாடுகளுக்குப் பிரதமர் ரணிலின் ஆதரவைப் பெறுவதற்காக இந்த அறிவிப்பின் பின்னணி இருக்கலாம்.

மூன்றாவது - சிங்கள மக்களிடையே சமாதானத்தின்பால் ஏற்பட்டுள்ள ஆர்வத்தினால் தனது முரண்பட்ட போக்கு, தனக்கு இருக்கும் ஆதரவுத் தளத்தையும் இன்னும் சிதைத்து விடும் என அவர் கருதியிருக்கலாம். இதன்வழியே - பேச்சுக்களை வன்மையாக எதிர்க்கும் ஜே.வி.பியுடன் இவ்விடயத்தில் மட்டும் தன்னை இனங்காட்டிக் கொள்ளவும் அவர் விரும்பாமலிருக்கலாம்.

நான்காவது - சமாதானப் பேச்சுக்களின் நகர்வு உறுதியானதாக அமையுமிடத்து தனது பங்கேற்பும் அதில் இடம்பெறாதவிடத்து, தான் ஒதுக்கப்பட்டு விடக்கூடும் என்றும் அவர் எண்ணத் தலைப்படலாம்.

ஐந்தாவது - சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதான தோரணையில் புதிய சில ஆலோசனைகளை - உதாரணமாக நேற்றுமுன்தின உரையில் பிரேரித்த இனநல்லிணக்க, அரசியல் தீர்வை நோக்கிய குழுக்கள் அமைப்பு - முன்வைத்து, அவற்றினூடாக அரசியற் குழப்பமொன்றை, அமைதிக்கான முயற்சிகளின் பேரிலேயே ஏற்படுத்தவும் ஜனாதிபதி சந்திரிகா திட்டமிடலாம்.

இத்தகைய காரணிகளின் அடிப்படையில் - ஜனாதிபதி சந்திரிகாவின் புதிய தோற்றம் பூணுதலானது எச்சரிக்கையுடனேயே அணுகப்படவேண்டியதாகும்.

இதையே அவரின் மீதான கடந்த கால அனுபவங்களும் தமிழ்மக்களுக்குக் கற்றுத்தந்துள்ளன.

# முஸ்லிம்களுக்குத் தனி அலகு; தேவையில்லை என்கிறார் முகமட்!

## வீண் பிரச்சினைகள் எழும் என எச்சரிக்கிறார்

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கென கிழக்கில் தனியான அலகு ஒன்று தேவையில்லை என்றும் இது பல தேவையற்ற பிரச்சினைகளையே உண்டாக்கும் என்றும் அமைச்சர் எம்.எச். முஹமட் கருத்து வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது -

வடகிழக்கில் முஸ்லிம்கள் ஏனைய சமூகங்களுடன் இணைந்து வாழவே விரும்புகின்றனர். எனவே தனியான முஸ்லிம் அலகு என்ற விடயம் மிகக்கவனமுடன் ஆராயப்படவேண்டும்.

இவ்வாறு தனி அலகு ஒன்றை உருவாக்குவது - வட,கிழக்குக்கு வெளியே வாழும் 70 சதவீதமான முஸ்லிம் மக்களைப் பாதிக்குமென்று கூறிய அவர்-

அடுத்தமுறை புலிகளுடனான பேச்சுக்களில் அரசாங்கத் தரப்பிலி ருந்தும் முஸ்லிம் பிரதிநிதிகள் இடம்பெறவேண்டும் எனவும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 3 நாள் இலக்கியக் கருத்தரங்கு

இலங்கை கலைக்கழக தமிழ் இலக்கியக்குழு நடாத்தும் "ஈழத்து நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சி" பற்றிய கருத்தரங்கும், கலை நிகழ்ச்சிகளும் 16 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்விற்கு தமிழ் இலக்கியக் குழுத் தலைவர் பேராசிரியர் க.அருணாசலம் தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், கௌரவ விருந்தினராக பேராசிரியர் அனுராதா செனவிரத்னவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## குப்பிளான் கிராமத்துக்கு விரைவில் மின்சார வசதி!

(வலி.வடக்கு)

குப்பிளான் கிராமத்திற்கு விரைவில் மின்சார வசதி கிடைக்கவிருக்கிறது.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்க வசதியாக குப்பிளான் சந்திக்கண்மையில் புதிய மின்மாற்றி ஒன்று அமைக்கும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் மின் கம்பங்கள் நாட்டி கம்பிகள் இணைக்கும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வேலைகள் பூர்த்தியானதும் மின்சார விநியோகம் இடம்பெறுமென மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தனள.

(105)

## பீரிஸ் விடுதலைப் புலிகளின் ஆதரவாளராம்; அவுஸ்திரேலியாவில் சிங்களவர் ஆர்ப்பாட்டம்

(மெல்பேர்ண்)

அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ள அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு எதிராக அங்குள்ள சிங்களவர்கள் குழுவொன்று ஆர்ப்பாட்டம் செய்துள்ளது.

நேற்று மெல்பேர்ண் நகரில் அமைச்சர் பீரிஸ் உரையாற்றுவதாக இருந்தபோதும் இந்த எதிர்ப்பினால் அவரது நிகழ்ச்சி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் பீரிஸை புலிகளின் ஆதரவாளர் எனக் கூறியும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசு, புலிகளுக்கு சகலவற்றையும் விட்டுக் கொடுப்பதாகக் கூறியும் அவுஸ்திரேலியாவின் வேறுபல இடங்களிலும் அமைச்சர் பீரிஸுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த திங்களன்று சிட்னியில் அமைச்சர் பீரிஸ் உரையாற்றிய மண்டபத்துக்கு வெளியேயும் இந்த வகையிலான ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# பல்கலைக்கழக பாடவிதானம் மீள் ஒழுங்குபடுத்தப்படும்!

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக பாடவிதானங்கள் மீள ஒழுங்குபடுத்தப்படவுள்ளன. நாட்டின் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் மேற்படி பாடவிதானங்களை மீள ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அனைத்துத் துறைசார்ந்த பாடத்திட்டங்களிலும் இம்மாற்றங்கள் மிக விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளன.

இனங்களுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் புரிந்துணர்வை உருவாக்கக்கூடிய வகையிலும் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் தொடர்ந்து வளர்க்கக்கூடிய வகையிலும் அமையக்கூடிய அம்சங்களை பாடவிதானத்தில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(க)

### வைத்தியசாலைத் தேவைக்கு

## யாழ்ப்பாணத்திலேயே ஒட்சிசன் தயாரிப்பதற்கு நடவடிக்கை!

(வண்ணை)

யாழ்.போதனா வைத்தியசாலைக்குத் தேவையான ஒட்சிசனை இங்கேயே தயாரித்து சிலின்டர்களில் அடைக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. இதற்கான நிதியை வெளிநாட்டு நிறுவனம் ஒன்று வழங்கியதுடன், இது தொடர்பாக இருவருக்கு கொழும்பில் பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் ஒட்சிசன் சிலின்டர்கள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டபோதும் சில சந்தர்ப்பங்களில் ஒட்சிசனுக்குத் தட்டுப்பாடு நிலவியதும் குறிப்பிடத்தக்கது.(111)

## தொழிலாளருக்கும் ஊழியருக்கும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்!

### தெல்லிப்பளை தெ.ப.உ.கூ.ச. நடவடிக்கை

(வலி - வடக்கு)

தெல்லிப்பளை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் தனது தொழிலாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஒரு ல்ட்சத்து 66 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

சங்கத்தின் செயற்பாடுகளால் கிடைக்கப்பெற்ற மேலதிக இலாபப் பணத்தில் இக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் தொழில் முயற்சிக்கேற்ப வழங்கப்பட்ட இக்கொடுப்பனவில் ஆகக்கூடுதலாக 4000 ரூபா வரையில் தொழிலாளர்கள் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதைவிட சங்க நிர்வாகப் பணியாளருக்கு தலா 25 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுள்ளது.

(105)

# அதிகாரப் பகிர்வின் மூலமே நாடு பிளவுபடுவதை தடுக்கலாம்!

## அவுஸ்திரேலியாவில் அமைச்சர் பீரிஸ்

(மெல்பேர்ண்)

அதிகாரங்களைப் பகிர்வதற்கான திட்டமொன்றின் மூலம் நாடு பிளவுபடுவதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக - அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவுஸ்திரேலியாவில் கருத்து வெளியிட்டார்.



சிட்னியிலிருந்து வெளியாகும் செய்தி இதழொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மத்திய கிழக்கிலும் வட அயர்லாந்திலும் சமாதான முயற்சிகள் நெருக்கடிகளைச் சந்தித்துள்ள நிலையில் இலங்கையில் சமாதான முயற்சிகள் வெற்றிகரமாகச் சென்று கொண்டிருக்கின்றன.

விடுதலைப்புலிகளைத் தனிமைப்படுத்தி தீர்வைக் காண்பதற்கு, முன்னர் மேற்கொண்ட முயற்சிகளின் மூலம் அரசாங்கங்கள் தவறிழைத்துவிட்டன என்றும் பீரிஸ் கூறினார்.

## சலன சித்திரம் நன்றி தெரிவிப்பு

வேலணை, சேர்.வைத்திலிங்கம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி - போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டிருந்த ஊர்காவற்றுறை பிரதான வீதியைத் திறந்துவிட்டமைக்காக - யாழ்.சலன சித்திர அமைப்பினரால் - பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி வீதியைத் திறந்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு ஒத்துழைக்குமாறு கோரி கடந்த 5 ஆம் திகதி இவ் அமைப்பினரால் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காப்பு மறைப்புக்களற்ற கடற்சமரில் பெண் போராளிகளின் சாதனைகள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் போரியல் சாதனைகளில், கடற்புலிகளது தோற்றமும், அவர்களது செயற்பாடுகளும் மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது. காலதுக்குக் காலம், விடுதலைப் போராட்டம் எதிர்கொண்ட சவால்களுக்கு முகம் கொடுக்கும் விதமாக தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மனதில் உதித்த திட்டமாக வர்ணிக்கப்படும் கடற்புலிகள் அணி, ஈழவிடுதலைப் போராட்டத்தில் பல முக்கிய சாதனைகளைப் படைத்துள்ளது. 1991 ஆம் ஆணடு முதல் போராட்டக் களத்துக்குள் குதித்து, கடலிலும் போர்க்களத்தை விரித்த கடற்புலிகள் அணி, ஈற்றில் கடற்படையைக் கலங்கடிக்கும் ஒரு அணியாக வளர்ச்சி கண்டு, ஈழவிடுதலைப் போராட்டத்தின் அசைக்க முடியாத வெற்றியை மேலும் உறுதிப்படுத்தியது.

ஒரு கெரில்லா அமைப்பாக உருவெடுத்த விடுதலைப் புலிகள் அமைப்பு, தரையில் மறைந்திருந்து தாக்கி எதிரிக்குச் சவால் விடுவதுடன் நின்றுவிடாமல், காப்பு. மறைப்புக்களற்ற கடற்பரப்பிலும் குதித்து எதிரிக்குச் சவால்விட்டது, உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாற்றில் எங்கும் இடம்பெறாதது. சூழவும் கடற்பரப்பாலேயே அரண

ஜெயசிக்குறு எதிர்ச்சமர், ஆனையிறவுத் தாக்குதல் என கடறபுலிகள் அணி முககிய பங்கெடுக்காத தாக்குதல்களே இல்லை எனுமளவுக்கு பல தாக்குதல்களிலும் கடற்புலிகளின் வலு பயன்படுத்தப்பட்டது. இவற்றுள், ஆனையிறவு வெற்றியைச் சாத்தியமாக்கிய, மிக முக்கியமான குடாறப்பு தரையிறக்கச் சமர் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கடற்புலிகள் அணி ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலப் பகுதிக்குளளாகவே, பெண் கடற்புலிகள் அணியும் புலிகளால் உருவாக்கப்பட்டிருந்தது. ஈழப்போராட்டத்தில் சமபங்கெடுப பதனூடாகவே, ஈழப்பெண்கள் தம்மீதான சகல ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுபடமுடியும் என்ற தூரநோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மகளிர் அணி, வெகுவிரைவிலேயே ஆண்களுககு நிகராக சகல பிரிவுகளிலும் பங்கெடுக்கத் தொடங்கிவிட்டனர். பெண்களின் ஆளுமைகள், அவர்களது இயல்தகவுகள் குறித்து எப்போதும் இரண்டாம் நிலையிலேயே சிந்திக்கும் தமிழ்ச்சூழலில், தம்மால் முடியாதது எதுவும் இல்லை என, பெண்களது ஆளுமையின் எல்லைகளைத் தொட்டுக்காட்டிய விடுதலைப் புலிகள் மகளிர் அணியில், கடற்புலிகள் மகளிர் அணியும் முக்கிய



விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் கொடி

படகும், அதற்குரிய படகணியுமாகும்.

உண்மையாகவே நேரடியாகக் கடற்பரப்பில் பயன்படுத்தப்படுகின்ற இநதப் படகு, தரையில் படகை இழுத்துவருவதற்குப் பயன்படுத்தப்படும் இழுவைவாகனத்துடன் ஊர்தியாக கொண்டுவரப்பட்டிருந்தது. படகைச் சூழச் செய்யப்பட்ட சில ஓவியக்காட்சிப்படுத்தல்கள் தவிர, இதில் சோடனைகள் எதுவும் கிடையாது. நிஜத்தை நேரடியாகத் தரிசித்த போராளிக் கலைஞர்களது கலைப்படைப்புக்கள் போல, இதுவும் நேரடியானதாகவே வடிவமைக்கப்பட்டிருந்தது. போர்க்களத்தில் நின்றவன் போலிகளைப் பேசுவதில்லை. நிஜத்தை நேரில் தரிசித்தவர்கள், அந்த நிதர்சனத்தை தமிழ்மக்களுக்கு இந்தப்

**- சடாயு -**

படகுமூலம் நேரடியாக வழங்கியிருந்தனர். கடற்புலிப் பெண்கள் அணியின் வளர்ச்சியில் பல ஆக்கமும் ஊககமும் புரிந்து செயற்பட்டுவருபவரான, ஒரு கலைஞனான மோகன் இந்தப் படகை மக்கள் காட்சிக்கு ஏற்ற விதமாக வடிவமைத்திருந்தார்.

படகிலிருந்த அணியினருடன் நேரடியாகப் பேசியபோது, அவர்கள் உற்சாகமாக தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். தமிழ் மக்களைக்காக்க, காப்புமறைப்பற்ற கடற்பரப்பில் தாம் செய்த போராட்டங்களைப் பற்றி அவர்களது மக்கள் அறிந்துகொள்ள வேண்டாமா என்கின்ற ஆதங் கம் கொண்டவர்களாக, அவர்கள் தமது அனுபவங்களை ஒளிவுமறைவின்றி

வமைத்தனர். இதனுடைய ஓட்ட வேகம் 49 நொட்ஸ்'' என்று அதன் அமைப்பை, உருவாக்கத்தைப் பற்றிக் கூறிய அவர், "நாம் சண்டை பிடிக்கிற கப்பலை நாமே கட்டுகிறோம். வெடிமருந்தையும் நாமே அடைகிறோம். தரையில் தொலைத் தொடர்புக் கட்டடங்களையும் நாமே அமைக்கிறோம்'' என, பெண் போராளிகளது பல்துறை ஆளு

கடற்படைக்குப் பலசமர்களில் சிம்மசொப்பனமாக விளங்கிய இந்தப் படகில் பொருத்தப்பட்டுள்ள ஆயுதங்களின் விபரங்களையும் அவர்கள் கூறத்தவறவில்லை. "முன்னணியில் பொருத்தப்பட்டுள்ளது, 14.5 மில்லி மீற்றர் இரட்டைச் சுடுகுழல் துப்பாக்கி. இரு கரையிலும், கடலுக்கெனத் தயாரிக்கப்பட்ட மரேன் பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. இது தவிர மூன்று பி.கே.ரகத் துப்பாக்கிகள், மற்றும் 40 மில்லி மீற்றர் டொங்கான்.'' என படகில் பொருத்தப்பட்டுள்ள ஆயுதங்களின் விபரங்களைக் கடகடவெனச் சொல்லிமுடித்தார் அந்தக் கட்டளையிடும் அதிகாரி இளந்தென்றல்.

இந்த ஆயுதங்களுடன், படகின் பின்புறத்தில் பொருத்தப்பட்டுள்ளது ஒரு முக்கயமான ஆயுதமாகும். இது ஒரே தடவையில் இரு ரவை நாடாக்கள் பொருத்தப்படக்கூடிய 20 மில்லி மீற்றர் சுடுகுழலாகும். இத்துணை ஆயுதங்களும் பொருத்தப்பட்டு ஒரு பலமான கடற்கலமாகவே இந்தப் படகு வடிவமைக்கப்பட்டுள்ளது."பல போர்க்களங்களில் பயன்படுத்தப்பட்டு வெற்றிகளை ஈட்டித்தந்த இந்தப் படகின் விபரங்களை, இவ்வாறு நீங்கள் வெளியிடுவது, எதிர்காலத்தில் போர் ஒன்று நடக்குமென வைத்துக் கொண்டால் உங்களுக்கு ஆபத்தான


படகில் பொருத்தப்பட்டுள்ள விமான எதிர்ப்புப் பீரங்கி.


முன்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள இரட்டைக்குழல் துப்பாக்கி.

மைக்கப்பட்டுள்ள, வட- கிழக்கில் கடலில் பலமான நிலையில் நிற்காமல் போராட்டத்தில் வெற்றிபெறமுடியாது என்கின்ற புவியியல் உண்மையை உணர்ந்து உரியகாலத்தில் இப்படையணி உருவாக்கப்பட்டமையாலேயே, ஈழப் போராட்டம் இன்று இந்த நிலைக்கு வளர்ந்துள்ளது.

யாழ்.குடாநாட்டின் முற்றுகைக்குப் பின்னர், விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது இந்தக் கடற்புலிகள் அணியே.

மான ஒன்று.

இவ்வளவு கால விடுதலைப் போரின் சாதனைகளுக்கும் பின்னால் பெண்களது பங்கு எவ்வளவு தூரம் இருந்துள்ளது என்பதை, சர்வதேச அளவில் உணரச் செய்யும் விதமாக, கடந்தமாதம் 10ஆம் திகதி, விடுதலைப் புலிகளின் மகளிர்பிரிவினர் தமிழீழப் பெண்கள் தினத்தினை கிளிநொச்சியில் நடாத்தியிருந்தனர். புலிகள் சேனையில் பெண்கள் இத்

மையை விளக்கிக் கூறினார்.

யார் இந்த மேஜர் மங்கை? "1994 ஆம் ஆண்டு கற்பிட்டிக் கடற்பரப்பில் சாகரவர்த்தனா என்கின்ற கடற்கலத்தின் மீதான தாக்குதலில் உயிராயுதமாகப் பங்கேற்ற கடற்கரும்புலி அவர். கடற்பரப்பில் இந்தப் பாரிய கப்பலைத் தாக்கி மூழகடித்த வெற்றிச்சமரில் பங்கேற்ற இவர், கடற்புலிகள் மகளிர் பிரிவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று செயற்பட்ட ஒருவர். எனவே அவரு

தாக முடியாதா?' என்ற பெண் ஊடகவியலாளர் ஒருவரது கேள்விக்குச் சிரித்தபடியே பதிலளித்தார் தொலைத் தொடர்புப் பொறுப்பாளர் நிலா.

"எம்மிடம் இருக்கும் படகுகளின் விபரங்களையும், ஆயுத விபரங்களையும் மட்டுமே எதிரி அறிந்து கொள்ள முடியும். ஆனால் எமது போர் உத்திகளையும், மனவலிமையையும் அவர்கள் ஒருபோதும் அறிந்து கொள்ள முடியாது. ஆயுதங்களல்ல, அவற்றின் சூட்டுவலுவே முக்கியமானது.


இரட்டை ரவைச்சுற்று பொருத்தத்தக்க 20 மி.மி. சுடுகுழல்.


பக்கவாட்டில் பொருத்தப்பட்டுள்ள சுடுகுழல் ஒன்றுடன் போராளி ஒருவர்.


முன்புறத்தில் பொருத்தப்பட்டுள்ள இரட்டைச் சுடுகுழல் துப்பாக்கி.

முன்னர், யாழ்.குடாநாடு தரைவழிப் பாதைகளேதுமற்று முற்றுகையிடப்பட்டபோது, கிளாலிக் கடனீரேரியூடான மக்களின் பயணத்தை, படைகளுக்குச் சவால்விட்டுச் சாத்தியமாக்கியவர்கள் இந்தக் கடற்புலிகளே. பின்னர் 1995ஆம் ஆண்டு, யாழ். குடாநாடு ரிவிரெச தாக்குதலுக்குள்ளானபோது போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கு இந்தக் கடற்புலிகள் அணியே உத வியது. முல்லைத்தீவு முகாம் அழிப்பு,

துணையளவில் உள்ளனரா என உலகம் வியக்கும்வகையில், இந்நிகழ்வில் பெண்புலிகளின் 12 படையணிகளின் அணிவகுப்பு நிகழ்த்தப்பட்டது. இவற்றுடன், பெண்புலிகளின், குட்டிசிறி மோட்டார் பிரிவு, பீரங்கி எதிர்ப்புப் படைப்பிரிவு, கடற்புலிப் பிரிவு என்பவற்றின் ஊர்திப் பவனிகளும் இந்நிகழ்வில் இடம்பெற்றது. இந்த ஊர்திப் பவனியில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது, கடற்புலிகள் மகளிர் அணியி ன்ரின் உதயச்செல்வி கடற்புலிப்

அனைவருக்கும் கூறிக்கொண்டிருந்தனர். முதலில் உதயச்செல்வி என்கின்ற அந்தப் படகு பற்றி இப் படகணியின் கட்டளையிடும் அதிகாரி இளந்தென்றல் விளக்கினார்.

"கடற்போரில் எம்மால் பயன்படுத்தப்படுகின்ற எல்லாக் கலங்களையும்போல, இதுவும் எமது சொந்தத் தயாரிப்பாகும். மேஜர் மங்கை படகுக் கட்டுமானப் பிரிவினரால் வடிவமைக்கப்பட்ட இந்தப் படகினை பெண் போராளிகளே வடி

டைய நினைவாக, இந்தக் கட்டுமானப் பிரிவுக்கு மேஜர் மங்கை கட்டுமானப் பிரிவு எனப் பெயர்வைக்கப்பட்டுள்ளது'' என்று விளக்கினார் அவர். நான்கு இயந்திரங்கள் பொருத்தப்படக்கூடிய இந்தக் கடற்கலத்தின் வலு, 1000 குதிரைவலுவாகும். போர்க்களத்தில் போராளிகளாக மட்டுமன்றி, ஆயுதங்கள், கடற்கலங்கள் தயாரிப்பவர்களாகவும் பெண்களின் வளர்ச்சியை இந்தப் போராட்டம் சாத்தியமாக்கியிருக்கிறது.

சிறந்த சூட்டுவலுவினை தலைவர் எமக்கு அளித்துள்ளார். அது இருக்கும்வரை எம்மை எவரும் வெற்றி கொள்ள முடியாது.'' என்று சர்வசாதாரணமாகக் கூறினார் அவர். அந்தப் போராளியின் விழிகளில் தான் எத்துணை தன்னம்பிக்கை. இதுவல்லவோ ஒரு பெண்ணின் ஆளுமை. பெண் விடுதலைபற்றிப் பேசிக் காலங்கடத்துபவர்கள் கட்டாயமாகச் சந்திக்க வேண்டியவர்கள் இவர்கள்.

(மிகுதி நாளை தொடரும்)

# முகமாலையில் கடற்படை - கடற்புலிகள் சந்திப்பிலிருந்து...



முகமாலையில் நேற்று நடந்த சந்திப்பிற்கு மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட வருவதை முதலாவது படத்திலும், புலிகளின் தளபதிகளுக்கு பாதுகாப்பு வழங்கிய காவல்துறையின் வாகனத்தை இரண்டாவது படத்திலும், கடற்படை, விமானப்படை அதிகாரிகள் சந்திப்புக்கு வருவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.



படையதிகாரிகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் வரவேற்பதை மூன்று படங்களிலும் காணலாம்.



சந்திப்புக்கு கடற்புலிகளின் துணைத் தளபதி செழியனும், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும், கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹொவ்டேயுடன் வருவதை முதலாவது படத்திலும், புலிகளின் பிரமுகர் புலித்தேவன் - மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொடவுடன் உரையாடுவதை இரண்டாவது படத்திலும், புலிகளால் கையளிக்கப்பட்ட அறிக்கையை விமானப்படை அதிகாரி கையில் வைத்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.



சந்திப்பு முடிவடையும்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரியால் திட்டவரைபு கையடக்கக் கணினியில் பதிவுசெய்யப்படுவதை முதலாவது படத்திலும், சந்திப்பில் கலந்துகொண்ட புலிகளின் தரப்புப் பிரதிநிதிகளை இரண்டாவது படத்திலும், சந்திப்பை ஏற்பாடு செய்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:- கணேஷ், லிவிங்ஸ்டன்)

## கரையோர மக்களின் நெருக்கடி: ஆராய பிராந்தியக் குழுக்கள்!

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு கடற்பகுதியிலும் கரையோரப் பிரதேசங்களிலும் பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு பிராந்தியக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிராந்தியத்திலும் அப்பகுதிக்குப் பொறுப்பான கடற்படை அதிகாரி, இராணுவ அதிகாரி மற்றும் அப்பகுதிக்குரிய கடற்புலிகளின் பிரதிநிதி ஆகியோரைக் கொண்டதாக இப்பிராந்தியக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வாறு - நேற்று முகமாலையில் நடைபெற்ற மாவட்ட மட்ட பாதுகாப்புக் குழுக்கூட்டத்தின்போது சிபார்சு முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பிராந்தியக் குழுக்கள் குறிப்பிட்ட பிராந்தியத்தில் ஏற்படுகின்ற கடற்தொழில் சம்பந்தமான பிரச்சினைகளையும் கரையோரப் பகுதிகளில் கடற்படை மற்றும் இராணுவத்தினரால் ஏற்படும் பிரச்சினை தொடர்பாகவும் ஆராய்ந்து உரிய பிரச்சினைகளை அடையாளம் காணும்.

இக் குழுவினரின் செயற்பாடுகளுக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஒத்துழைப்பு வழங்குவார்கள். (க,லி)

## உயர் பாதுகாப்பு வலயம்; பாதுகாப்பு உபகுழு ஆராயும்

### தெல்லிப்பளையில் சனியன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும் பொதுமக்களின் மீள்குடியமர்வு தொடர்பாகவும் எதிர்வரும் சனியன்று தெல்லிப்பளையில் நடைபெறவுள்ள பாதுகாப்பு உப குழுவின் மாவட்ட மட்டக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

விடுதலைப்புலிகளின் வட போர் முனை கட்டளைத்தளபதி கேணல் தீபன் ஆயுதம் தாங்கிய மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

சுமார் பத்து ஆயுதம் தாங்கிய மெய்ப்பாதுகாவலர்கள் தளபதி கேணல் தீபனுக்கு பாதுகாப்பு வழங்கியவாறு மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி அரச தரப்பிடம் கோரப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் தளபதி தீபன் கலந்து கொள்வதை நோர்வே அரசும், இலங்கை அரசும், போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவும் அதிகம் விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லைகளை தெளிவாக வரையறை செய்தல், மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பல பிரச்சினைகள் இக்கூட்டத்தின் போது விரிவாக ஆராயப்படவுள்ளன (க,லி)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD**

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

விண்ணப்ப முடிவுத் திகதி: 15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

# பேச்சுக்கள் ஆரம்பிக்க முன் ஆசீர்வதித்த யாழ்.ஆயர்!



(யாழ்ப்பாணம்)

முகமாலை சூனியப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற கடற்படை மற்றும் கடற்புலிகள் சந்திப்புக்கு முன்னர், யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற ஆசி வழங்கினார்.

பேச்சு ஆரம்பமாவதற்கு சற்று முன்னர் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அப்பகுதிக்கு வருகைதந்த யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயம், அங்கு நின்ற விடுதலைப் புலிகளின் அரசியல்துறையைச் சேர்ந்த புலித்தேவனுடன் உரையாடும்போது "இன்றைய சந்திப்பு சுமுகமாகவும் ஆக்கபூர்வமாகவும் அமைய வேண்டும். இதற்காக நான் ஆண்டவரைப் பிரார்த்திக்கிறேன். இப்பேச்சுக்களுக்கு எனது ஆசிகள் என்றும் இருக்கும்" எனவும் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த புலித்தேவன் - சமாதான முயற்சிகள் தொடர்பாக உங்களைச் சந்திக்கின்ற சர்வதேச சமூகப்பிரதிநிதிகளுக்கு உண்மை நிலையை தெரியப்படுத்த வேண்டும் என்றும் உங்களுடைய உதவியும் ஆலோசனைகளும் எமக்கு என்றும் தேவையெனவும் தெரிவித்தார்.

பின்னர் ஆயர் அங்கிருந்து விடைபெற்று கிளிநொச்சியை நோக்கிச் சென்றார்.

(க,லி)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக மாணவன்
**அ.உ.தயகுமார்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**F.P.அந்தோனிப்பிள்ளை**
அவர்களின் பிரிவால் வாடும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

- சக மாணவர்கள் -
*பொது நிர்வாக பட்டப்பின் டிப்ளோமா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## மரண அறிவித்தல்



**F.P.அந்தோனிப்பிள்ளை (சிறில்)**
(B.sc. Dip.in Ed., S.L.E.S,
இளைப்பாறிய அதிபர்)

நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட **பர்னான்டோ போல் அந்தோனிப்பிள்ளை** அவர்கள் 12.11.2002 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 14.11.2002 (வியாழக்கிழமை) பி.ப.4.00 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெற்று, நல்லடக்கம் நாவாந்துறைச் சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் குறுக்குத் தெரு,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**அ.சாந்தகுமார்.**
*(மகன்)*

(029)

# வரவு செலவுத் திட்டத்தையல்ல சமாதானத்தையே ஆதரிக்கிறோம்

## நாடாளுமன்றில் மாவை.சேனாதிராஜா

(கொழும்பு)

இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பல அதிருப்தி தரும் விஷயங்கள் இருந்தாலும், சமாதானத்தினை இலக்காகக் கொண்ட செயற்பாடுகளுக்காக நாம் அரசாங்கத்தை ஆதரிப்பதெனத் தீர்மானித்துள்ளோம் என யாழ்.மாவட்ட கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு 200 வருட சிறைத்தண்டனை விதித்தமை அநீதியான செயலெனவும்,

அப்படியாயின் - தமிழ் மக்களைப் படுகொலை செய்த அரசியல் தலைமைத்துவங்களுக்குத் தூக்குத் தண்டனையே வழங்க வேண்டி வரும் என்றும் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.பல்கலை...

மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

இதேசமயம் - கடந்த ஆறாம் திகதி முதல் இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்களும் ஒரு சில கோரிக்கைகளை முன்வைத்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது. தமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என இம் மாணவர்களும் அறிவித்துள்ளனர்.

## கடற்படை...

இவை போதுமானவையாக இல்லை. எனவே, ஏனைய கடற்தொழிலாளர் வாழ்கின்ற அனைத்துக் கடற்கரைப் பிரதேசத்திலும் சுதந்திரமாக கடற்தொழில் செய்வதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

மேலும், கடற்படையினரால் கடற்தொழிலாளருக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள், அச்சுறுத்தல்கள் போன்றவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் - கடற்படையினர் சமாதான சூழலுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது என்றும் - புலிகள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. இதற்குப் பதிலளித்த படைத் தரப்பினர் மேற்படி விடயங்களை கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.

(க,லி)

## சுமுகமாக....

பகுதியில் இராணுவத்தினரின் விசேட கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் சுறுசுறுப்பாக செயற்பட்டு, குறிப்பிட்ட சிறு பகுதியை துப்புரவு செய்து கண்ணிவெடிகளை அகற்றினர். கண்ணிவெடி அகற்றப்பட்ட இப்பிரதேசம் வெள்ளை நாடாக்களினால் எல்லைகள் போடப்பட்டு இருந்தன. இவ்வெல்லைகளுக்கு அப்பால் நடமாடமுடியாத பிரதேசம் என்ற அறிவித்தல் பலகையும் போடப்பட்டிருந்தது. அப்பகுதியில் விசேடமாக மலசலகூடம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

சரியாக 9.50 மணியளவில் படைத்தரப்புத் தளபதிகள் மேற்படி பகுதிக்கு தமது வாகனங்களில் வந்து சேர்ந்தனர். ஏற்கனவே அப்பகுதியில் தயார் நிலையில் இருந்த கண்காணிப்புக் குழுவினர் கைலாகு கொடுத்து அவர்களை வரவேற்றனர். தொடர்ந்து, தமிழீழ காவல் துறையினரின் பாதுகாப்புடன் விடுதலைப் புலிகளின் தளபதிகள் அங்கு வந்து சேர்ந்தனர். இவர்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கைலாகு கொடுத்து வரவேற்றார்.

தொடர்ந்து, விசேடமாக அமைக்கப்பட்ட கொட்டகைக்குள் இருதரப்பினரும் கைலாகு கொடுத்து ஒருவரையொருவர் அறிமுகம் செய்து கொண்டனர்.

இவ் இருதரப்பினரினதும் வருகைக்காக சுமார் பதினைந்து நிமிடங்கள் கண்டி வீதியூடான போக்குவரத்துக்கள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

காலை 10 மணியளவில் ஆரம்பமாகிய நேற்றைய சந்திப்பு நண்பகல் 1.45 மணிவரை நீடித்தது. இச் சந்திப்பின் நிறைவில் இரு தரப்பினரும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர்.

(க,லி)



முகமாலையில் புலிகள் பிரதிநிதிகளை வரவேற்கிறார் புருவ் ஹொவ்டே

### அனலைதீவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் மரணம்

# கொலை குற்றச்சாட்டிலிருந்து நிஷாந்தன் விடுவிப்பு

ஈ.பி.டி.பி உறுப்பினர் புஷ்பராசா மரணமான சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட அவ்வமைப்பைச் சேர்ந்த நிஷாந்தனை, நீதிமன்றம் குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்துள்ளதாக - ஈ.பி.டி.பி. வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது- பிரேத பரிசோதனையில் மரணம் நஞ்சருந்தியதால் ஏற்பட்டது எனக் குறிப்பிடப்பட்டதால் நிஷாந்தன் மீதான குற்றச்சாட்டுக்களை நீதிமன்று நிராகரித்துள்ளது என்றும்,

புஷ்பராசா- எவ்வாறு நஞ்சு உட்கொண்டார் என்பது பற்றி பூரணமாக விசாரிக்கும்படி உத்தரவிட்ட நீதவான் விசாரணை அறிக்கையை எதிர்வரும் 27ம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி கோரியுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அவுஸ்.துணைத்.....

மணிவரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் துணைத் தூதுவர் பேர்ட் லோஜன மற்றும் அவுஸ்திரேலியாவின் உதவும் அமைப்பின் பிரதிநிதி பிறெய்ன் அகிலன் ஆகியோரே அரசியற்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்தித்துக் கலந்துரையாடல் நடாத்தினர். (க,லி)

## தளபதிகள்....

யாராலும் அல்ல என்ற விடயத்தில் மிகவும் அக்கறை யாகவுள்ளனர்.

எனவே மேற்படி உடன்பாடு மிக விரைவில் எட்டப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. இவ்வுடன்பாடு தற்போது வரைபு வடிவத்தில் உள்ளதால் அதனைப் புலிகள் பரிசீலனை செய்து வருகின்றனர்.

(க,லி)

## சிபாரிசுகள்....

தலைமையில் நடைபெற்ற மாவட்ட மட்ட பாதுகாப்பு உபகுழுக் கூட்டத்தின் முடிவின்போது மேற்படி திட்ட வரைபு கைச்சாத்திடப்பட்டது.

வட.கிழக்கு கடற்பகுதியில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இப்பகுதிகளில் கடற்புலிகள் தமது நடவடிக்கைகளின்போது பின்பற்றுகின்ற நடைமுறைகள் தொடர்பாகவும் விடுதலைப் புலிகள் தமது ஆலோசனைகளைத் தெரிவித்தனர்.

இதேபோல்- படைத்தரப்பும் மேற்படி கடற்பகுதியில் தாம் மேற்கொள்கின்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் கடற்தொழிலுக்கான அனுமதி வழங்கல் தொடர்பாகவும் தமது ஆலோச னைகளை முன்வைத்தனர்.

மேற்படி இருதரப்பினரதும் ஆலோசனைகளை அடிப்படையாக வைத்து பல சிபார்சுகளை உள்ளடக்கிய திட்டவரைபு இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரினால் தயாரிக்கப்பட்டது. இத்திட்டவரைபில் விடுதலைப் புலிகள் தரப்பும் படைத்தரப்பும் கையெழுத்திட்டனர். இத்திட்ட வரைபின் பிரதிகள் படைத்தரப்பு மற்றும் புலிகளுக்கும் வழங்கப்பட்டன. மூலப்பிரதியை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தம்முடன் எடுத்துச் சென்றார்.

நேற்றைய சந்திப்பில், படைத் தரப்பில் - கடற்படையைச் சேர்ந்த வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி எச்.எஸ்.இரட்ண கீர்த்தி, கப்டன் டீ.எஸ். உடவத்தே, இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, மேஜர் ஜெனரல் இரத்தினசபாபதி, லெப்.கேணல் எஸ்.சில்வா மற்றும் விமானப்படையைச் சேர்ந்த கப்டன் கே.குணதிலகவும் -

விடுதலைப்புலிகள் தரப்பில் கடற்புலிகளின் துணைத் தளபதி லெப். கேணல் செழியன், கடற்புலிகளின் தாக்குதல் அணித்தளபதி லெப். கேணல் ஸ்ரீராம் மற்றும் லெப். கேணல் ரஞ்சன், வடமுனைக் கட்டளைத் தலைமையகத்தைச் சேர்ந்த லெப்.கேணல் அறிவு, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம் பரிதி, அரசியற் துறையைச் சேர்ந்த புலித்தேவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.15 | 96.62 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 152.40 | 153.80 |
| 1 யூரோ | 96.93 | 97.07 |
| 1 சுவிஸ் பிராங் | 66.14 | 67.18 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.54 | 54.52 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.71 | 25.71 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.